
# தங்கக் கோவை


## 2003

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
(ஸ்ரான்லி கல்லூரி)
பழைய மாணவர் - ஆசிரிய சங்கம்
வழங்கும்

## புதிய பூமி 2003



**Middlefield Collegiate Institute**
**525 Highglen Ave**
**Markham**
**Canada**



## பவள விழா

**18th October, 2003**



TOP PRODUCER 2002

# வீடு வாங்க விற்க

உங்கள் கனவு
இல்லத்தை சுலபமாக
அடைய வீட்டு
நிர்மாணத் துறையில்
12 வருடங்கள்
அனுபவமிக்க
புஷ்பகாந்தனை
அழையுங்கள்



**416 894 1187**

இலவச வீட்டு மதிப்பீடு
**Quick Sale**
இலவச **Mortgage**
**Inspection Assistance**
**Sale is Guaranteed or I will Buy!**
அழையுங்கள்! **PAT**




**Tel: 416 894 1187**
**Bus: 416 290 1200**

**R: புஷ்பகாந்தன் (Pat) B.Sc. Eng.**
**Sales Representative**

# கல்லூரிக் கீதம்


ஜய ஜய கனகரத்தினம் வித்தியாலயம்
ஜகந்தனில் ஓங்குகவே!
ஜகந்தனில் ஓங்குகவே!

திருவார் கனகரத்தினம் பெரேரா
தேசுறு கன்னங்கரா
உருவாக்கிய கழகம்
உருவாக்கிய கழகம்
(ஜய ஜய)

செம்மையும் மஞ்சளும் நீலமும் சேர்ந்தே
சீரார் கொடி எடுப்போம்
சேர்ந்தே அடி நடப்போம்
சேர்ந்தே அடி நடப்போம்
(ஜய ஜய)

வீரம் வாய்மை அறமென மூன்றும்
விளங்கும் குணமாகி
வெற்றி வாழ்வுறுவோம்
வெற்றி வாழ்வுறுவோம்
(ஜய ஜய)

காவியம் ஓவியம் ஆம் கலை பலவும்
திவ்விய இசை நலனும்
காண்டகு குரு குலமாய்
ஆண்டுகள் வாழியவே


ADAPTIVE REHABILITATION SERVICES
Physiotherapy
Foot Orthotics
Massage Therapy
Acupuncture
Subbiah Ramkumar
Registered Physiotherapist (Ontario)
Member of CPA
3430 Finch Ave East, Unit # 104
Scarborough, Onatario
Tel: 416-208 7232
Fax: 416-208 7141

# மன்றத் தலைவரின் குறிப்பிலிருந்து

## என் அருமை பள்ளி நண்பர்கட்கு ஓர் மடல் !



"நாளை நமதே ..."

நாம் இம் மன்றை ஆரம்பித்து இன்று 369 நாட்கள். இன்று நாம் ஒரு மைல் கல்லை அடைந்திருக்கின்றோம் என்றால் அது மிகையாகாது. நாம் ஒரு நீண்ட கனவை நினைவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாம் அடைய வேண்டிய தூரம் மிக நீண்டது. ஆனால் அந்த முதற் கல்லை எட்டியிருக்கின்றோம். நாம் இந்த "புதிய பூமியில்" எமது பிறந்த நாட்டை விட்டு பந்த பாசங்களை, பட்டம் பதவிகளை, சொத்து சுகங்களை, உற்றார் உறவினர்களை, அண்டையவர் அயலவரை இழந்தோ பறிகொடுத்தோ அல்லது பிரிந்தோ இந்தப் புதிய பூமியில் எமது புது வாழ்வை புதுப்பித்துக் கொண்டோம். எம்மில் பலர் கொண்ட கொள்கையில் இலட்சியத்தில் தீராது உழைத்து பல வெற்றிக் கொடிகளை ஏற்றியுள்ளார்கள்; ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். கலை ஆர்வம் மிக்கோர் தமது திறன்களை அரங்கேற்றியுள்ளார்கள்; திரை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது எம் ஒவ்வொருவரது கடமையும் கடப்பாடும் ஆகும்.

நாம் ஒரு பாரிய பழமை வாய்ந்த பண்பட்ட கலை, கலாச்சாரங்களைக் கொண்ட நாகரீக வளர்ச்சியடைந்த இனம். இன்று பல சோதனைக்கும் வேதனைக்கும் முகம் கொடுத்து உலகின் பல் வேறு பகுதிகளில், ஏன் எமது தாயகத்திலும் கூட நாதியற்று, நாடற்று, நட்டாற்றில், நடுக்கடலில், நடுத்தெருவில், நடுக்காட்டில், நடு நிழலில், நடு வெளியில் நம் இனிய உறவுகள் வாழ்ந்து மடிந்தும், மடிந்து கொண்டுமிருக்கிறார்கள்; வாழத் துடிக்கிறார்கள். வாழ வழியின்றி வாழ வழி தெரியாது வழி காட்டலின்றி கல்விக் கூடங்களின்றி, மருத்துவ நிலையங்களின்றி, அடிப்படை வசதியின்றி, அரை வயிற்றுக்கு உணவின்றி, கற்றோர் பெற்றோர் இன்றி எம் உறவுகள் போக இடமின்றி, போக வழி தெரியாது புகலிடம் தேடி நிற்கின்றார்கள்.

வாழ்ந்த இனம் மீண்டும் வாழ நினைக்கின்றது. ஆண்ட இனம் மீண்டும் ஆளத்துடிக்கின்றது. அன்பு நண்பர்களே நாம் அனைவரும் கூட்டாகவோ, அன்றித் தனித்தனியாகவோ கொடுத்த விலைகள் விலை மதிக்க முடியாதவை. நாம் கடந்து வந்த பாதை மிகவும் கரடு முரடானது. மேடு பள்ளம் நிறைந்தது. காடும் கடலும் சூழ்ந்தது. வேதனைகள் நிறைந்தது. சோதனை மேல் சோதனையாக உருண்டு, தவழ்ந்து, நடந்து, ஓடிக் கடந்திருக்கிறோம். கடந்து கொண்டிருக்கிறோம். வெற்றியைத் தேடி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய நாளில் இதற்கு விலை கொடுத்த ஒவ்வொருவரையும் நாம் நினைவு கூர்ந்து, வணங்கி வாழ்த்தி எம் வருங்கால சந்ததிக்கு நாம் என்ன செய்வது என்ன செய்து கொண்டிருக்கிறோம் எவ்வாறு இவர்களை வாழ வைக்கலாம் வழி நடத்தலாம். இவை எம் எல்லோருக்கும் இடப்பட்ட ஒரு தலையாய கடமை. இந்தக் கடமையை எங்கு நாம் ஆரம்பிப்பது? கல்விக் கூடங்களில் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. அந்த வகையில் எமது மன்றத்தின் பங்கு எவ்வளவு; எம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட பங்களிப்பு எவ்வளவு என்பதை நான் உங்களுக்கு கூறத்தேவையில்லை. எனவே, அதை நாம் ஒவ்வொருவரும் எம்மால் முடிந்தவரை உதவிட, பணி செய்ய முன் வருவோம். நமது பங்களிப்பை பயனுள்ளதாக்க முன் வருவோம். நாம் ஏதோ வாழுகின்றோம் என்றில்லாது,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க நாம் வெறும் பார்வையாளர்களாக மட்டுமின்றி பங்காளர்களாக எமக்கிட்ட பங்களிப்பை, கடமையை நிறைவேற்றுவோம் என இந் நன் நாளில் உறுதி பூணுவோமாக.

புதிய பூமி 2003ல் உங்கள் அனைவரையும் காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இப் - "புதிய பூமியில்" புதுமை படைப்போம். புகழ் சேர்ப்போம். திரண்டு வாரீர். திக்கெல்லாம் திசை-யெல்லாம் எம் இனம், எம் கல்லூரி புதுமை பெற, புகழ் பெற, புடம் போட்ட தங்கம் போன்ற புலமை மிக்க திறமை கொண்ட பலரை உருவாக்கிய உருவாக்கிக் கொண்டிருக்கின்ற உருவாக்கப் போகின்ற எமது பள்ளியின் வளர்ச்சியில் உயர்ச்சியில் உள்ளத்தில் உறுதியாக உழைப்போம் என இந்தத் "தங்கக் கோவையில்" தங்கத்தில் பொறிப்போம். உங்கள் பொன் வார்த்தைகளை பொன் எழுத்தில் மண் உலகும் விண் உலகும் வியக்கத்தக்க வகையில் பொறித்திட வாருங்கள். வந்து சேருங்கள். எம் மன்றில் மலர் படைக்க, கவி இயக்க, கலை பயக்க, நாடகமாட, நாட்டியம் நடனமிட இசை முழங்க இன்னோரன்ன சொல்லில், எழுத்தில், மனதில் வடிக்க முடியாத வார்த்தைகளில் வரிக்க முடியாத பலதையும் படைப்போம், கொடுப்போம், எம் அன்னைத் தமிழீழத்துக்கு வாரி வழங்குவோம், வாழ்த்துவோம். அவள் பசி தீர்த்திட "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த யகத்தையே அழித்திடுவோம்" என்னும் பாரதிதாசன் வரிகளின்படி கல்விப் பசி கொண்ட அந்த பச்சிளம் பாலகர்கட்கு எம் பள்ளிச் சிறார்களின் ஒவ்வொரு வெற்றிப் படியிலும் பங்கு கொள்வோம். திறமையும் உறுதியும் மிக்க அச்சிறார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.

எமது பழைய மாணவர் ஆசிரியப் பெருந்தகைகள் அவர்களது குடும்பங்கள் உறவினர்கள் பலருக்கு பல்வேறு தேவைகள், உதவிகள், வேண்டி நிற்கிறார்கள். பலர் தங்களது தேர்ந்தெடுத்த பாதைகளில் முன்னேறியுள்ளார்கள், முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். நாம் எல்லோரும் ஒரு பாடசாலையில் ஏதோ ஒரு காலத்தில் கல்வி பயின்றவர்கள் என்ற இணைப்பில், உறவில் நாம் எல்லோரும் ஒருங்கிணைந்தால் நாம் செய்யவேண்டிய செய்யக்கூடிய எத்தனையோ விடயங்களை இலகுவாக எட்டமுடியும். இந்த நல்நோக்குடன் நாம் என்ன பங்களிப்பை ஆற்ற முடியும் என சிந்தித்து, கலந்தாலோசித்து இம்மன்றத்தின் வளர்ச்சிக்கு எம்மாலானதை நிறைவேற்றுவோமாக.

எமது கல்லூரியின் தற்போதைய பெற்றோர் ஆசிரிய சங்கம் தமது தேவையைப் பட்டியலிட்டுள்ளனர். அந்தப் பட்டியலை நாம் தேர்ந்தெடுத்து தொகுத்து வகுத்து வசதி செய்து வளர வைப்போம். வழிவகுப்போம். நமக்குக் கிடைத்த இந்த அரிய சர்ந்தப்பத்தை நாம் நளுவ விட்டால் நாளை நாம் மனவருத்தம் அடைவோம். இன்று நாம் இத் தருணத்தை தவற விடாமல் நாம் அனைவரும் ஒன்றாக ஒரு மனத்துடன், பெரு விருப்புடன் மனமுவந்து நம் கடமையை உரிமையை நிறைவேற்ற "சிறு துளி பெரு வெள்ளம்" போன்று எங்கள் ஒவ்வொருவரின் சிறு பங்களிப்பை பெரு நிதியாக்கி வரலாறு படைப்போம், நண்பர்களே.

"...இந் நாளும் நமதே"

நன்றி

தலைவர்
க. சிவனேஸ்வரன்

යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

P.O. Box - 57,
Thirunelvely,
Jaffna, Sri Lanka

24.09.2003



President,
Canagaratnam MMV (Stanley College),
Past Students and Teachers' Association of Canada.

I have great pleasure in extending my congratulation and best wishes in organizing a past Students and Teachers Association of Jaffna Canagaratnam Mathiya Maha Vidiyalayam (Stanley College) in Canada and on the occasion of a cultural show on October 18th 2003 in Markham. I am also glad that a publication too is launched to mark this event.

Forming alumni association of North-East based Schools in overseas destinations, though a novel feature, is somewhat inevitable with the growth of a Sri Lankan Tamil Diaspora. It has its own advantages too. Apart from the fellowship and nostalgia shared by past pupils it provides a suitable rallying point for the alumni to rise up to help its alma-mater especially during times of turmoil. I consider that it is the unbounden duty of every past pupil to assist his/her school in whatever way possible.

In this context, as one who is in close proximity to our School, I would like to outline some of the urgent needs of our school. During the ethnic war the Science Laboratory is damaged beyond repair. Steps have already been taken to put up a new structure. The walls around the College too are badly damaged and need urgent repairs.

Funds for these tasks are sought from various sources and any assistance from Old Students Union would be very welcome. I would like to point out at this juncture that it is not easy to seek funds for projects of this nature from NGOs or other aid agencies operating in the Jaffna region. Their priorities are quite different. Unless old students come forward to help, things could dilapidate further.

I would like to take this opportunity to inform you of the 75th year celebrations of our school falling towards the end of the year. Some activities in this connection have already commenced. The past students too are obliged to mark this happy occasion in a fitting manner and I hope your Association too would respond favourably.

I thank you for your greetings on the occasion of my appointment as Vice-Chancellor of University of Jaffna and the invitation for a message and I am confident that it would add to the contribution already made by Old Students Unions both here and abroad towards the progress of our school.

Thanking you,

Yours sincerely,

Professor. S. Mohanadas.
Vice-Chancellor

BMO Nesbit Burn

**Renato (Ron) Dell' Anno**
**Investment Advisor**

Jackie Vasila
Investment Representative
Tel: (416) 590-7635
Fax: (416) 590-7601



**BMO NESBITT BURNS INC**

145 wOODBRIDGE aVENUE
Woodbridge, Ontario L4l 2s6

Tel: (905) 851-7909
Fax: (905) 851-6733
Toll Free 1-800-567-2626



***A Member of BMO Financial Group***

# ஒன்றுபடுவோம்



நாம் பிறந்து வளர்ந்த மண்ணிலேதான் எத்தனை எத்தனை பாடசாலைகள். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு பழைய மாணவர் - ஆசிரியர் சங்கம் அமைந்திருக்கும். ஊரிலே உள்ள பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலையின் வளர்ச்சியிலும் அங்கே நடக்கும் தில்லு முல்லுகளைத் தட்டிக் கேட்பதிலும் மிகவும் கூடுதலான பங்குவகிக்கும்.

பாடசாலை நிர்வாகத்தில் நடக்கும் குறை நிறைகளை ஆராய்ந்து ஆலோசனை வழங்கும். சிரமதானங்கள் செய்யும். ஆனால் அவற்றால் பொருளாதார ரீதியாகப் பணத்தைச் செலவு செய்து ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்ற முடியாது. ஏனெனில், எமது உள்நாட்டு மக்களின் பொருளாதார நிலமை அதற்கு இடம் கொடுக்காது.

கனடாவிலோ வேறு வெளிநாடுகளிலோ வாழுகின்ற எம் மக்கள் பொதுவாக பொருளாதார ரீதியாக வசதி உள்ளவர்கள். அத்துடன் வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதியும் இலங்கை நாணயப் பெறுமதியோடு ஒப்பிடும் போது மிகவும் உயர்வானது. எமது சிறு தொகையே ஊரிலே மிகவும் பெரிய தொகையாக மாறும். இங்கே இருக்கும் எங்களால் ஊருக்குப் போய் சிரமதானம் செய்யவோ வேறுவிதமான உதவிகளை வழங்கவோ முடியாது. பாடசாலையின் தேவைகளை அறிந்து அவற்றை நடைமுறைப் படுத்துவதற்குரிய பொருளாதார பங்களிப்பை செய்வது ஒன்றே எம்மால் இயலக்கூடியது. பாடசாலைக்கு உதவி செய்வதே எமது மன்றத்தின் முக்கிய நோக்கமாக இருந்தாலும் சங்கத்தின் உறுப்பினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதும் எமது குறிக்கோளாகும்.

எமது பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள், கல்வி கற்பித்த ஆசிரியர்கள் எத்தனையோ பேர் இந்தக் கனடா மண்ணில் வாழ்கிறோம். நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் எல்லோரும் கனகரத்தினம் ம.ம.வித்தியாலய (ஸ்ரான்லி கல்லூரி) பழைய மாணவர் - ஆசிரியர் சங்கம் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்றுபடவேண்டும்.

நாம் ஒன்றுபட்டால் நாம் கல்வி கற்ற பாடசாலை உயர்வடையும். எமது சந்ததி நன்மை பெறும். அத்தோடு இங்கேயும் எமது நலன்கள் பேணப்படும். திருவிழா செய்யும் குடும்பத்தால் மட்டும் தேரை இழுத்து வர முடியாது. ஊர் கூடினால் தான் தேரை இழுக்க முடியும். அதே போல் தான் சங்கத்தை வளர்ப்பதற்கும் ஒரு சிலரின் பங்களிப்பு மட்டும் போதாது. பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் தோள் கொடுக்க வேண்டும் என பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

**“ ஒன்று பட்டால் உண்டு வாழ்வு ”**

பொன்னையா இலங்கேஸ்வரன்
செயலாளர்


NKS Draperies & Blinds
உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட
அழையுங்கள்
கேதா
210 Silver Star Blvd., Unit 825
(Midland & Finch)
Scarborough, ON
416-321 6420
905-944 0218
Cell: 416-738 3370

# *Canagaratnam MMV - Past Students and Teachers Association of Canada*

Dear Friends,

I am proud and privileged to present this message to the CMMV- Past students and teachers association of Canada. First of all I would like to express my explicit and sincere thanks to all members and executive committee for inviting me to your cultural event.

I am extremely happy to know that you have formed an organization to help our school. The list of professionals from our institution who have earned name and fame is long indeed. Vice Chancellor of the University, Civil Servants, members of parliament, teachers, principals, accountants, lawyers, engineers, doctors, entrepreneurs, and the list goes on. These are the fields in which the past students of CMMV have excelled. Unlike other schools in Jaffna peninsula, CMMV is a government school that catered to the economically disadvantaged students of high caliber from distant and diverse communities. The tireless effort and dedication of the teachers contributed immensely to the higher standard of education that the students received. The past students are all over the globe as part of Tamil Diaspora performing outstandingly well in their respective fields. This is a real testimony to the outstanding education the school has provided.

I was fortunate to visit our alma mater twice in the recent past and had the opportunity to discuss the problems facing the school with the principal, teachers and students. As you may be aware the school was bombed and remained closed for a long time. The school premises were occupied by various armed forces. The compound was full of land mines. The cruel war did not only displace the people but deprived a generation of students their education.

After the ceasefire agreement the land mines were painstakingly cleared by the teachers and students and the school reopened for enrollment. Currently nine hundred students are attending the school. The school is in dire need of funds for reconstruction, repairs and for educational materials. The principal and the teaching staff are appealing for funds from past students belonging to the expatriate community. It is commendable that your organization is trying to fulfill this urgent request. I'll be more than happy to lend my support for this worthy goal. I wish you a great success.

Thank you and may God bless you.

S. Earampamoorthy, M.D.
California, U.S.A.

**Sunflowers furniture**

**416-609-8556**

**905-270-5422**





3024 Kennedy Rd. (Kennedy & Finch) ... 416 609 8556

1225 Dundas St. (Dixie & Dundas) ... 905 270 5422

**www.sunflowersfurniture.com**

# JENNY AUTO SALES INC




**Buying**

**Selling**

**Trading**

**Appraising**

Of Quality Used Cars & Trucks



**A.Anton**
PRESIDENT

**J.J. Rajah**
SALES MANAGER

**4440 Steeles Ave. E**
**(Kennedy & Steels) Markham,**
**Ontario, L3R OI4**

**Bus: 905-470 0048**
**Cell: 416-629 2505**
**Fax: 905- 470 0079**

# மண்வாசனை

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே", என்னும் மகா கவி பாரதியாரின் சீரிய வரிகளை நாமனைவரும் எம்முள் ஒரு முறை அசை போடுதல் நன்று. எங்கு வாழ்ந்தாலும், எவ்வளவு உயர்ந்தாலும், தேடற்கரிய செல்வங்களைப் பெற்றாலும் எம் தாயினையும் நாம் பிறந்த தாய்த்திருநாட்டையும் நாம் மறக்கலாமா? மறந்து வாழலாமா? மறக்கத்தான் முடியுமா? இத்தகைய நெஞ்சை உருக்கும் கேள்விகளின் அடிப்படையில் அரியாலையில் வந்து உதித்த நம் அனைவரிற்கும் பெரியதோர் கடப்பாடு உள்ளது.

அரியாலையூர் நாம் பிறந்த மண். வளர்ந்த மண், ஓடியாடி விளையாடிய மண். ஓங்கி உயர்ந்த பனை மரங்கள்! ஒய்யாரமாய் அசைந்தாடும் தென்னைமரத் தோப்புக்கள்!! பசுமை நிறைந்த வயல் வெளிகள்!!! நீண்ட வெண்மணல் மேடுகள் கொண்ட கடலோரங்கள். இவையெல்லாம் எம் நெஞ்சில் நீங்கா நிழலாடும் நினைவலைகள். நீண்டு நிலைத்து நிற்கும் எம் மண்ணின் வண்ணங்கள். கோவில் தலங்கள் என்ன! கேணிகள் குளங்கள் என்ன!! விளையாட்டுத் திடல்கள்தான் என்னவென்ன... எவற்றிற்கும் குறைவில்லை எம் மண்ணில்.

இத்தகைய சிறப்புகளோடு விளங்கும் அரியாலையின் தலையாய கல்விப் பீடமாக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் திகழ்கின்றது. இலங்கைத் தேசாதிபதி ஸ்ரான்லியின் காலத்தில் வட பகுதி சட்ட மன்ற உறுப்பினராக இருந்த அரியாலை ஈன்றெடுத்த பெருமகன் திரு ஆ. கனகரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் தொழில் சார் பாட நெறிகளைக் கொண்ட இரு மொழிப் பாடசாலை ஒன்றை நிறுவக் கருதி, கல்வி மந்திரி திரு.கன்னங்கரா அவர்களின் ஆதரவில் இப்பாடசாலையை நிறுவினார். அறுபத்து நான்கு கலைகளில் மிகக் கூடிய தொகையான கலைகள் கற்பிக்கப்படும் பாடசாலை இது என்பது மற்றுமொரு சிறப்பாகும்.

இதன் முதலாவது அதிபராக திரு. பெரேரா அவர்கள் பொறுப்பேற்று இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு கால்கோளாக இருந்தார். இதனால் தான் கல்லூரிக் கீதத்தில் "திருவார் கனகரத்தினம் பெரேரா தேசுறு கன்னங்கரா உருவாக்கிய கழகம்" என்ற வரிகளைக் காணலாம். "ஸ்ரான்லிக்கல்லூரி" என வழங்கி வந்த இந்த நிறுவனம் பின்னர் அதன் நிறுவனர் திரு ஆ. கனகரத்தினம் அவர்களின் சேவை மக்கள் மனதில் நிலைத்து நிற்க வேண்டும் என்ற நன் நோக்கினால் பெயர் மாற்றம் பெற்றது. எனினும் "ஸ்ரான்லி" எனும் நாமமும் அடைப்புக் குறிக்குள் இன்றும் பயன்படுத்தப்படுவது ஈண்டு நோக்கற்பாலது.

இக் கல்லூரி அரியாலையூரின் பெருமைக்குரிய சொத்தாக அன்றும், இன்றும் விளங்கி வருகிறது எனின் அது மிகையாகாது. எனினும், இக்கல்லூரிக்குரிய பெரும் சிறப்பொன்றினையும் நாம் இங்கு நோக்குதல் வேண்டும். இந்த நிறுவனம் மாணவ விடுதியை நெடுங்காலம் தன்னகத்தே கொண்டு

விளங்கி, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணாக்கர்களைத் தன்பால் கவர்ந்து கல்வி புகட்டியுள்ளது பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு எமது கல்லூரியில் வந்து தங்கிக் கல்வி கற்ற மாணவர்களில் பலர் உயர் பதவிகள் வகித்துக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள் என்பது பெரும் சிறப்பே. இந்த வகையில் எமது கல்லூரி வைத்திய நிபுணர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், கல்விமான்கள் எனப் பலரை எம் இனத்திற்கும், நாட்டிற்கும் வழங்கியுள்ளது.

இத்தகைய சிறப்பிற்குரிய எமது கல்லூரிக்கு ஒரு பழைய மாணவர் - ஆசிரிய சங்கத்தினை உருவாக்க வேண்டும் என்ற ஆதங்கம் அவ்வப்போது கனடாவிலுள்ள பழைய மாணவர்கள் சிலரிடையே தோன்றிய போதும் அண்மைக் காலம் வரை அது செயல் வடிவம் பெறவில்லை. எனினும் கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக இந்த நோக்கம் நன் நோக்கம் கொண்ட பழைய மாணவர்களின் பெரு முயற்சியினால் நிறைவேற்றியுள்ளது பாராட்டத்தக்கதாகும். இந்த நோக்கத்திற்கு செயல் வடிவம் கொடுத்து உற்சாகமாக இயங்கிக் கொண்டிருக்கும் அந்த நல் உள்ளங்களை அரியாலையூர் மக்கள் அனைவரும் மனதாரப் பாராட்டுகிறோம்.

அதே வேளையில், எமது நகரிலுள்ள கல்லூரி என்ற வகையில் அரியாலையூர் மக்களுக்கு பாரிய பங்களிப்பு உண்டு என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் படித்தவர்கள், ஆசிரியர்கள், கனடாவில் வாழ்கின்றவர்கள் யாவரும் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து செயற்படுதல் அவசியம். அத்துடன் எமது ஊரிலுள்ள சிறந்த கல்விக்கூடம் என்ற வகையில் அரியாலையூர் மக்கள் அனைவரிற்கும் இதில் பெரும் பங்குண்டு என்பதனை நாம் மறந்து விடலாகாது.

எமது தாய் மண்ணின் அவலங்களால் பின் தங்கி நிற்கும் கல்லூரிகளில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் ஒன்றாகும். செல்வத்துட் பெருஞ் செல்வமாம் கல்விச் செல்வத்தை எம்மவர் பலருக்கு வழங்கிய இந் நிறுவனம் நலிதல் கண்டு நாம் வாளாதிருத்தல் தகாது. எமது கடப்பாட்டினை நாமெல்லாம் நன்குணர்ந்து செயற்பட வேண்டும். பரந்த நோக்குடன் செயற்படும் எமது செயற்குழுவின் செயற் திட்டங்களில் இணைந்து செயற்படுவோம்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

கல்விச் செல்வமே பெருஞ் செல்வம். அதனை எமக்களித்த கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை சிறப்புற செய்ய எம்மாலான பங்களிப்பை ஆற்றுவோம் வாரீர்.!!

என்றும் அன்புடன்,
கமலா துரைராசா
உபதலைவர்

***A Quotable Quote:***

When asked what he wished to become, as a young man, Nobel Laureate Albert Einstein was reported to have said, "I want to become a **useful person**, not a **successful person**."

Asked what he meant by it, Einstein replied, "A successful person is one who takes from society more than what he gives it. A useful person is one who gives the society more than what he takes from it".

# VISION AND MISSION



I like to wish everyone on behalf of our organization on this special occasion. Friends! we have a dream to build a strong, viable and healthy organization together with our school friends, teachers and their families. Our goal is to help, our school and our people financially and morally in Canada and in our home land. The society we want to build for the future generation must be healthy, educated, sharing and caring for one another. I am sure, we may need this type of society at some point of our life. Although we have wasted some valuable time, it is not too late to spare a few minutes of our precious time to achieve our common goal in this fast moving life with our busy schedule apart from our personal goals and dreams.

Please take a minute and look back to see how education play a part in your life. We all know that the education plays a big role in our chosen fields. Therefore, we have a duty to support our institution by all means. We have come to this land for whatever reason, but this is a land of great opportunity that we should make use of. Therefore we are privileged to share the knowledge and the wealth with the less fortunate ones. This is our moral duty.

We have come a long way today to celebrate this event. There are so many of our people, who have laid down their lives and sacrificed a lot for others to lead a peaceful and prosperous life. We shouldn't forget those who made the sacrifice for our future. In the mean time, there are so many of our loved ones living in terrible conditions. In order to make their lives better, we all unite together in our organization to make a difference.

We have made plans and goals to achieve them. We all have to join hands and work together. It is easier said, than done. We have a long way to go. Our main goal is to help our school and students. Next, is to assist the people to start a new life here. We are to share what we have in bad times and good times. We have an opportunity like this, once in a life time, to make use of. If we don't use this now, we may regret it later. Therefore, 'friends' in this occasion we all are determined to make use of our time to this cause. Please join together and work towards our goal.

Thank you.

K. Sivaneswaran
President Canagaratnam MMV
(Stanley College) Past Student And Teachers' Association of Canada

# Casa Pirandello Ristorante




24 Woodstream Blvd.
Units 11-12, Woodbridge
Ont. L4L 8C4
www.casapirandello.com

**Tel: 905 264 2446**
**Tor: 416 680 2446**
**Fax: 905 264 7275**

# CANBE FOODS Inc

## The Flat Bread Specialist

இரண்டு இடங்களிலும்
சுடச்சுட றொட்டி மிகவும்
மலிவு விலையில் பெற்றுக்
கொள்ளலாம்

**50** சதம்

Tel: 416-298-2219
1600 Brimley Rd # 10
Scarborough

Tel: 905-305-1858
Fax:905- 305-8982
3980 14th Avenue # 10
Markham, ON, L3P 0B1

**E-mail: canbefoods@rediffmail.com**

# CERESNEY / WEISBERG
# IN ASSOCIATION

## Barristers and Solicitors

4651 Sheppard Ave. East, Suite 202
Toronto, Ontario M1S 3V4
Tel: (416) 291-7701
Fax: (416) 291-1766
hweisberg@cer-weis.com

**HOWARD WEISBERG, B.A., LL.B**

4651 Sheppard Ave. East, Suite 202
Toronto, Ontario M1S 3V4
Tel: (416) 291-7701
Fax: (416) 291-1766
MCERESNEY@cer-weis.com

**MARTIN A. CERESNEY, B.A., LL.B**

# பாடல் சான்ற புலனெறி வழக்கம் - ஒரு திறவு கோல்

புலனெறி வழக்கம் எனினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம் எனினும் ஒன்றே. சான்றோர் செய்யுள் நெறி என இதனைக் கூறலாம். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில், தமிழர் வரலாறு பற்றியும், தமிழ் மொழி குறித்தும் அறியும் ஆர்வம் பெரிதும் அறியக் கிடக்கின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்களை கற்க வேண்டும் என்ற விருப்ப உணர்வும் முனைப்புப் பெற்றுள்ளது. பண்டைய தமிழ் இலக்கியங்களைப் படித்து விளங்கிக் கொள்வதற்கு இப் புலனெறி வழக்கும் தெரிய வேணடியவொன்று.

சான்றோர் என அழைக்கப்படும் பண்டைய சங்கப்புலவர்கள், பாடல்களில் இடம் பெறும் பொருள் இன்ன வகையில் அமைய வேண்டும் என்ற ஒரு வரையறை கொண்டிருந்தனர். பொதுவாக ஒரு செய்யுள் மக்கள் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அவர்தம் முடிவு. இதற்கேற்ப, மக்கள் வாழ்வினை, அகவாழ்வு புறவாழ்வு என இரு கூறுபடுத்தி, மேலும் இவ்விரு பெருங் கூறுகளையும் பல்வேறு சிறு பிரிவுகளாக ஆக்கிக் கொண்டனர். அகவாழ்வு, புறவாழ்வு என்பன, அகத்திணை என்றும் புறத்திணை என்றும் முறையே வழங்கப்படும். இவற்றின் சிறு உட்பிரிவுகள் துறைகள் என்று அழைக்கப்படும். திணையினை ஒரு பெரிய நீர் நிலைக்கு ஒப்பிட்டால், அந்நீர் நிலையில், பல்வேறு மிருகங்களும் வந்து நீருண்ணும் வாயில்களைத் துறைகளுக்கு ஒப்பிடலாம்.

அகத்திணை, அன்பின் ஐந்திணை என்னும் ஐந்து திணைகளுடன் கைக்கிளை, பெருந்திணை என்ற இரு திணைகளும் உட்பட ஏழு திணைகளாக உள்ளன. இவைகள் ஏழும் இன்ப ஒழுக்கங்களாம். ஒழுக்கம் என்பது இங்கு இயல்பான வாழ்க்கை ஒழுங்கு என்பது பொருள். இவ்வின்ப ஒழுக்கங்கள், பிறரால் உணர்ந்து கொள்ள முடியாததாய், அநுபவிப்பவர்கள் தாமே அநுபவித்து இன்புறும் பாங்கில் அமைந்துள்ள படியினால், அக ஒழுக்கங்கள் என அழைக்கப்பட்டன. இவற்றினின்றும் வேறுபட்டுப், பிறரால் அநுபவிக்கக்கூடியன, புறவொழுக்கங்கள் எனப்பட்டன. இவைகளும் இன்பங்களே, போர், வீரம், கொடைபோல்வன இத்தகையன.

சங்கத்துச் சான்றோர்கள் கண்ட அகத்திணை, புறத்திணை ஒழுக்கங்களை விளங்கிக் கொள்வதன் முன், அமைவு நோக்கிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்று அமைக்கப்பட்ட நிலைப் பாகுபாட்டினையும், அவ்வந்நிலங்களைச் சார்ந்தவைகளையும் தெரிந்து கொள்ளல் பிரதானமாம்.

> "முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங் காலை முறை சிறந்தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை" - தொல் பொருள் - 3

சான்றோர் செய்யுள்களின் இடம் பெறும் பொருளை ஆராயுமிடத்து, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன முறையே சிறப்புடையன என்பது இச்சூத்திரத்தின் பொருளாம். இப்பகுப்பு முறையின்படி, நிலமும் பொழுதும் ஆகிய இருபொருளும் முதற்பொருள் எனப்படும். பொழுது என்பது, பொதுவாகக் காலப்பாகுபாடு அனைத்தையும் குறிப்பினும், கார்,

கூதிர் முதலிய பெரும் பொழுதுகளும், வைகறை, விடியல் முதலிய நாளின் பாகுபாடுமே முதற் பொருளில் அடங்குவன. நாளின் பகுப்பு சிறு பொழுது எனப்படும்.

கருப்பொருளாவன, தெய்வம் உணாவே.... என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தின்படி அந்நிலத்திற்குரியதாகக் கருதப்படும், தெய்வம், மக்கள், அவர்தம் உணவு, விலங்கு, பறவை, செய்தி (தொழில்), பண் முதலியவையும் இவைபோல்வன பிறிதுமாம்.

உரிப்பொருளாவது, அந்நிலத்திற்குரிய மக்களின் ஒழுக்கம். இவை, புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பனவாம். உரிப்பொருள், ஏனைய முதல், கரு ஆகிய இரு பொருளினும் சிறப்புடையது. முதற்பொருளினும் கருப்பொருள் சிறந்தது; கருப்பொருளினும் உரிப்பொருள் சிறந்தது. இதுவே, 'முதல்கரு உரி...' என்ற சூத்திரத்தில், 'முறை சிறந்தன', என்பதன் பொருள். குறிப்பிட்ட இவ்வைந்து உரிப்பொருள்களும், எல்லா நிலங்களுக்கும் பொதுவானவை எனினும், நிலங்களின் தன்மைக்கேற்ப, ஒவ்வொன்றினை ஒவ்வொரு நிலத்திற்குச் சிறப்புடையதாகக் கொண்டுள்ளனர். எடுத்துக் காட்டாக, குறிஞ்சி நிலம் மலையும் மலை சார்ந்த இடங்களுமாம். இவ்வமைப்பு, ஒத்த தலைவனும் தலைவியும் தம்முட்கூட்டி இன்புறுவதற்கு வாய்ப்பானதாகக் கருதப்பட்டது. நெய்தல் நிலம், கடலும் கடல் சார்ந்த பகுதியுமாம். கடல் மேற் சென்ற தலைவன் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகலாம். எனவே, அவன் திரும்பி வருங்காலும், தலைவி அவனையிட்டு ஏங்கிக் கொண்டும், இரங்கிக் கொண்டும் இருக்க வேண்டியவளாகின்றாள். இதனால், இரங்கல் என்னும் ஒழுக்கம் நெய்தல் நிலத்திற்குச் சிறப்புடை ஒழுக்கமாகியது. தலைவி, தலைவன் பிரிவினால் தாங்கொணாத் துயருறுவதும் இரங்கலே. இவ்வாறே, முல்லை நிலத்திற்கு இருத்தலும், மருத நிலத்திற்கு ஊடலும், பாலை நிலத்திற்கு துன்பத்தினைக் கொடுக்கும் பிரிதல் ஒழுக்கமும் சிறப்புடை ஒழுக்கங்களாக அமைந்தன.

குறிஞ்சி, முல்லை என்பன தாவரங்களின் பெயர்கள். இத்தாவரங்கள் குறிப்பிட்ட நிலங்களில் சிறப்புடையனவாயும், பெருவரவினவாயும் இடம் பெற்றமையினால், முறையே இத்தாவரங்களின் பெயரால் அவ்வந்நிலங்கள் பெயர் பெற்றன. சான்றோர் செய்யுள்களில் இப்பெயர்கள், அவ்வந் நிலங்களுக்குரிய சிறப்புடை ஒழுக்கங்களைக் கருதலாயின. இதன்படி புணர்தல் ஒழுக்கம் குறிஞ்சி எனவும், இருத்தல் ஒழுக்கம் முல்லை எனவும், ஊடல் ஒழுக்கம் மருதம் எனவும், இரங்கல் ஒழுக்கம் நெய்தல் எனவும், பிரிதல் ஒழுக்கம் பாலை என்றும் செய்யுள்களில் இடம்பெற்றன. இவ்வகை ஒழுக்கங்களும் விசேடமாகத் தமக்கென ஒவ்வொரு நிலங்களைக் கொண்டன என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. ஆனால், தமக்கென்று ஒரு நிலமும் இன்றி எல்லா நிலங்களுக்கும் பொதுவானவையாக இரு அகவொழுக்கங்கள் உள. அவை கைக்கிளை என்றும் பெருந்திணை என்றும் அழைக்கப்படும். கைக்கிளை என்பது, காம உணர்ச்சியே பிறவாதாள் மாட்டு ஒருவனுக்குக் காமம் இடம் பெறுவதாம். அஃதாவது ஒரு தலைக்காமம். பெருந்திணை என்பது பொருத்தமற்ற காமமாம். இவ்வாறு, முன் கூறிய தூய அக ஒழுக்கங்கள் ஐந்துடன், கைக்கிளை, பெருந்திணையும் சேர, அகத்திணை ஏழு வகையாகக் கொள்ளப்பட்டது.

இனி, துறைகள் யாவை என நோக்குவாம். தலைவன் தலைவியரிடையே இடம்பெறும் அன்பு தழுவிய ஒழுக்கம், களவு, கற்பு என இருவகைத்தாம். தலைவன் தலைவியைக் கண்ணுற்றது ஆரம்பமாக, வரைந்து (மணந்து) கோடல் வரையுள்ள கால ஒழுக்கம் களவொழுக்கம் எனவும், வரைந்து கோடலின் பிற்பட்ட கால ஒழுக்கம், கற்பொழுக்கம் எனவும் அமையும்.

தலைமகன் தலைமகளை முதலில் காணுமிடத்து ஏற்படும் காட்சி ஐயம், தெளிதல் ஆகியவையும், தலைவனிடம் இடம் பெறும் உணர்ச்சிக்குறிப்புக்கள், தலைவியிடம் தோற்றும் உணர்ச்சிக் குறிப்புகள், மெய்ப்பாடுகள் என்பனவும், இவை போன்றனவும் துறைகளாம். மேலும் இயற் கைப்புணர்ச்சிக்கண், இடம்பெறும் மெய் தொட்டுப் பயிறல் முதலியனவும், பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்த வழிக் கலங்கலும், பகற்குறி, இரவுக்குறி என்னும் ஈரிடத்தும் இடம் பெறுவனவும், மற்றும் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பாணன், விறலி முதலாயினோர் கூற்றுக்களும் இவை போல்வனவும் களவியல் காலத்துறைகளாம்.

தலைமக்கள் கூற்றுக்கள், தோழி கூற்றுக்கள், செயல்கள், விருந்து, புதல்வர்ப்பேறு, காமக்கிழத்தி, பரத்தையர் என்போர் பகுதிகள், பாணன், விறலி முதலியோர் வாயில்கள், அறிவோர் கூற்று, குறை வேண்டுவோர் பக்கம் முதலியனவும் இவை போல்வனவும் கற்புக்காலக்தைய துறைகள். மேலும் ஓதல், தூது, பகை என்பன காரணமாகவும், பொருள் ஈட்டல் காரணமாகவும் பிரியும் பிரிவுகளும் களவு, கற்பு என்னும் இரு காலத்தும் இடம் பெறும் துறைகள்.

அகத்திணை ஏழு பகுப்பாகக் கொள்ளப்பட்டது போல் புறத்திணையும் ஏழு பகுப்பாகக் கொள்ளப்பட்டது. ஓவ்வொரு அகத்திணை ஒழுக்கத்திற்கும் புறத்திணை ஒழுக்கம் வேறாகக் கொள்ளப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்னும் அகத்திணை ஏழிற்கும் முறையே வெட்கியும் கரந்தையும், வஞ்சி, உழிஞையும் நொச்சியும், தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன புறத்திணையாகக் கொள்ளப்பட்டன. புறத்திணை வகுக்கப்படும் போது அவைகளின் அகத்திணைகளுடன் ஒருமைப்பாடுகளும் அவதானிக்கப்பட்டுள. வெட்கியென்பது பகையரசனது பசுநிரைகளைக் களவிற் கவர்ந்து வருதல். இவ்வாறு கவரும் போது பகையரசன் வீரர்கள் அச்செயலைத் தடுத்து நிறுத்தும் பொருட்டுச் செய்யும் யுத்தம் கரந்தை எனப்பட்டது. கவரும் முயற்சியிலும் யுத்தம், தடுக்கும் முயற்சியிலும் யுத்தமாக இருவேறு யுத்தங்கள் இடம் பெறுவதாலேயே, குறிஞ்சித்திணைக்குப் புற ஒழுக்கம் இரண்டாயது.

வஞ்சி எனப்படும் புறத்திணை, தானே முழு மண்ணிற்கும் உரியவன் எனக் கொள்ளும் மண்ணுக்கும் மாற்று அரசனுக்கும் இடையே இடம்பெறும் போரைக்குறிக்கும்.

மருதத்திற்குப்புறமாக இடம்பெறும் யுத்தம் பகைவன் அரணை முற்றுகையிட்டு அழிப்பதை நோக்காகக் கொண்டது. இவ்விடத்தும் மதிலின் உட்புறம் இருந்தும் எதிர்ப்பு யுத்தம் இடம்பெறுகின்றது. இதன் காரணமாக, இவ்விரு யுத்தங்களையும், உழிஞை என்றும் நொச்சி என்றும் பாகுபடுத்திக்காட்டினர்.

தும்பை என்னும் புறத்திணை, ஓர் அரசன் தனது வலிமை காரணமாக இடம்குறித்து மாற்றானுடன் புரியும் போர்.

பாலையின் புறத்திணை வாகையாம். குற்றமற்ற தத்தம் இயல்பினையோ, தகுதியினையோ மற்றையோரிலும் பார்க்க உயர்ச்சி உண்டாகுமாறு காட்டுவது பாலை.

கல்வி முதலியவற்றுக்கும் இது பொருத்தமுடைத்து. கைக்கிளையின் புற ஒழுக்கமான பாடாண்திணை, கடவுளரையோ அன்றேல் தகுதியுடையோரையோ வாழ்த்தல், புகழப்படத்தக் கோரைபபுபகழ்தல், செவியறிவுறுத்தல் போன்ற பொருளில் இடம் பெறும். நில்லாமையினை எடுத்துக் கூறும் காஞ்சித்திணையே பெருந்திணைக்குப்புறமாம். அகத்திணைப் பெயர்கள் தாவரங்களை அடிப்படையாகக் கொண்டமை போல் புறத்திணைப் பெயர்களும் தாவரங்களையே தத்தம் பெயர்களாகக் கொண்டன. புறத்திணை குறித்த யுத்தங்களில் ஈடுபட்டோர், குறித்த தாவரங்களின் பூக்களைச் சூடிச் செல்வதே வழக்காறாய் இருந்தது. இம்முறை பற்றியே இப்பெயர்கள் இடம் பெறலாயின.

அகத்திணையுள் துறைகள் பாகுபடுத்தப்பட்டது போல், புறத்திணையுள்ளும் துறைகள் வகுக்கப்பட்டன. படை இயங்கும் ஒலி, சகுனம், ஒற்று, முற்றுகை, ஆகோள், ஊர்கொலை, ஆவினைக் கொணரல், பங்கீடு போன்றவை வெட்கியின் துறைகள். வேலன் வெறியாடல், மன்னர்க்குரிய பூக்களைக்குறித்தல், வள்ளிக்கூத்து, அமர் நீக்கல், வேந்தன் சிறப்புரைத்தல், வருபடை தாங்கல் போன்றவை கரந்தைத்துறைகள்.

படை எழும் அரவம், எரியூட்டல், எய்திய பெருமை, கொடை, கொற்றம், உவகை மொழி, பெருஞ் சோறு அழித்தல், வென்றோர் பெருமை, தோற்றோர் சிறுமை போல்வன வஞ்சியின் துறைகள்.

பகைவர் நாட்டைக் கொள்ள்க் கருதல், நினைத்தது முடிக்கும் அரசனது ஆற்றல், அரணிற் பரத்தல், அகத்துள்ளான் செல்வம், புறத்போனின் வருத்தல், எதிரி படையை ஒருவன் தாங்கும் பெருமை போல்வன உழிஞைத் துறைகள். மதில் காத்தல், மதில் மேற் போர், புறத்தோன் வென்ற மதிலை மீளக் கைப்பற்றல், அகழிப் போர் போன்ற கூற்றுக்கள் நொச்சித்துறைகள்.

தானை (சேனை) நிலை, யானை நிலை, குதிரைப்படை நிலை, ஒருவனை ஒருவன் அடுதல், படை அறுத்தல், பின் வாங்கிய படையினைத் தனியனாய் ஒருவன் தாக்கல், வென்ற வீரன் வாள் வீசி ஆடல் போன்றவை பற்றித் தும்பைத்துறைகள் இடம் பெறும்.

கூதிர்ப் பாசறை, வேனிற்பாசறை, ஏர் கொள்ளும் களம், போர் கொள்ளும் களம், பின் தேர்க் குரவை, வேலின் பெருமை, பகைதாங்கும் ஆற்றல், ஒழுக்கம், கல்வி, வாய்மை, நடுநிலை போன்ற இன்னோரன்ன குறிப்பனவாய் வாகைத்துறைகள் அமையும்.

கொடுப்போரை ஏத்தியும் கொடா தோரைத் தாழ்த்தியும் கூறல், வாயுறை வாழ்த்து, செவ-யறி வுறூஉ, பரிசில் பெறுவது, நீராட்டு மங்கலம் போன்றனவற்றினைப்பற்றிய கூற்றுக்கள் பாடான் துறைப்பாற்படும். பெருந்திணையின் புறமாகிய காஞ்சியில், மரணம் யாவர்க்கும் இடம்பெறுமென்பது அறிவால் மிக்கோர் கூறும் அறிவுரைகள், இறந்தோர் பற்றிய இரங்கல், நிலையாமை பற்றிய போர்க்களக் காட்சிகள், சிறைப்பட்டோர் நிலை, இறந்தோர் குறித்த பூசல் (ஆரவாரம்) போன்றவை பற்றிய நிகழ்வுகள் துறைகளாக அமையும்.

சங்ககாலச் செய்யுள்களை நோக்கின், ஒவ்வொரு செய்யுளும் ஏதோ ஒரு திணையினையும், அத்திணை சார்ந்த ஒரு துறையினையும் கொண்டதாக அமைந்திருப்பதனைக் காணலாம். இத்தகைய புலனெறி வழக்கொன்றினைச் சங்கத்துச் சான்றோர்கள் பேணி வந்துள்ளமை தமிழ் மொழியின் தொன்மைக்கும் பெருமைக்கும் அரும் பெரும் சான்றாக விளங்குகின்றது.

தொல்காப்பியம் (பொருளதிகாரம்), இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள், புறப் பொருள் வெண்பா மாலை போன்ற இலக்கண நூல்களளிலும், சங்க இலக்கியங்களிலும் பாடல் சான்ற புலனெறி வழக்கின் விபரமும் விளக்கமும் கண்டு தெளியலாம்.

முற்றும்

இ. ச. செல்வத்துரை
இளைப்பாறிய அதிபர், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)

# Divine Message

Humanity has progressed much in exploiting the material resources of the earth in order to promote the standard of life. However, neither the individual nor society has learned the way to inner peace and contentment. Envy and greed have fouled the relations between nations and between persons, suppressing the awareness of the unity that underlines all creation. The main cause of this calamitous situation is rank egoism, each one tries to grab for himself whatever adds to power and comfort. The ego is making puppets of them all. The words and deeds of men reflect this tendency of selfish aggrandizement. Every move is decided by the needs of the self only. No step is taken that does not promote one's selfish interests. Understand the fact that life is meant for offering selfless service.

Along with selfless service, one should also have a sense of sacrifice. It is not a great thing to serve those who are in a higher position than you. Such people can employ any number of servants. Likewise, you need not serve your equals. They will be seething with discontent from time to time, no amount of service will give them satisfaction. In order to restore peace in the individual and in society, the mind where desires are born and resolutions are framed has to be purged of attachment to the self. The mind has desires, as its wrap. When desires are ego-oriented, time and effort are wasted; duty is neglected; the body and its skills are misused. His life becomes a frantic rush from place to place and object to object. If the mind is let loose and given the mastery, man is driven from one inquiry to another. He loses his self-respect. Only those who perform such service with thought, word and deed will be able to purify their minds.

Nevertheless, of course, a person must have enough to lead a simple enough life.

*Kaymalla Pulanthiran*

Total Computer Solutions

Same Day Testing

## NetPLUS Computers

880 Ellesmere Road Unit 1A

Authorized PROMETRIC TESTING CENTER

### Training

- Microsoft Office
- PC Technician
- Oracle
- CISCO
- MCSE
- AUTOCAD
- A+

New & Used Computers

- Sales
- Repairs
- Upgrades

Net PLUS

**416 292 0003**


- Internet Sharing
- Home Networking
- Office Networking
- Web Page Design
- Software Development

A+ CERTIFIED SERVICE CENTER

**Compter Classes + Service**

# Dr. Krume Starkovski

Dental Surgeon



16 Bimbrok Road
Scarborough, Ontario
M1K 4T7

Tel: 416-267-8214
416-267-9883

# RASHI SILKS



2649 Eglinton Ave, East
Toronto, Ontario

P. Premanathan Fax: 416 264 0767


**416-264 1939**

Export & Import Retailers
& Gift Items, Children's Wear

# YARL

WINDOW BLINDS & DRAPERY






Call for free Estimates
N. Selvan

We are Specialized in

**Custom Made**

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Blinds
- Pleated Shades
- Draperies
- Woven Woods
- Honeycombs
- Cellular Shades
- Vienna Window Shades
- Californian Shutters

Yarl
Window Blinds & Drapery
5210 Finch Ave. East
Unit #3, Scarborough
Ontario - M1S 4Z6
www.yarldrapery.com
Tel: 416 332 8482
416 419 9247



J/Canagaratnam Magazine (முன்னோடல்)

# யாழ் - கனகரத்னம் மகாவித்தியாலய மலர் வாழ்த்து (2003) கனடாப் பழைய மாணவர்

## வெண்பா

வாழ்த்துவோம் முன்நாளில் ஸ்ரான்லி எனும் பெயரால்
ஆளுமை தந்த கனகரத்னம் - வாழ்த்திய
நாளும் பொழுது போல் நம் கல்லூரி ஓங்குயர்ந்து
சூழ தமிழ்வளர்த்த சால்பு.

ஏழைகளும் எல்லாப் புலமைப் பரிசிலரும்
வாழவைத்த தெய்வ கனகரத்னம் கல்லூரி
ஈழத் தமிழர் இலங்கையில் பல்லோரும்
வாழ வழிவகுத்த தாய்.

எல்லோரும் கல்வியிலே ஏற்றம் பெறவைத்து
நல்லோராய் வாழவைத்த நற்றொண்டே - வல்ல
ஈசன் அருளால் கனகரத்னம் கல்லூரி
பாசமாய்த் தந்ததே பார்.

வாழ்க! வளர்க! கனகரத்னம் கல்லூரி
நீள்க மனிதத்தின் நற்றொண்டு - ஆள்க
கனகரத்னம் மாவித்தியாலயத்தின் மாண்பு
இனம் வாழ என்றென்றும் ஏற்று.

## ஆசிரியப்பா

ஒவ்வொரு வருக்கும் தாமே படித்த
திவ்விய கல்லூரி அன்னை ஆகும்
கனக ரத்தினம் மகாவித் தியாலயம்
மனமாய் எம்மை கல்வியில் விழுமியம்
காணச் செய்த பரிசுத்த ஆலயம்
அரச கல்லூரி ஆனதால் அங்கு
தரமாய்ப் புலமைப் பரிசில் பெற்றோர்
வரமாய்க் கருதிப் படித்து உயர்ந்தனர்.

ஏழை மக்கள் வாழும் சூழலில்
வாழப் படிக்க உதவிய கலூரி
எங்கள் கனகரத் தினம்மகா வித்யாலயம்
தங்கும் மக்கள் உயர்ந்தனர் படிப்பால்
தெள்ளிய தமிழை விஞ்ஞானக் கல்வியை
வள்ளுவன் வாக்கைச் சர்வ மதங்களை
ஒன்றெனக் கற்கத் தூண்டிய தாலே
நன்றாய் ஞானம் வளர்த்த கல்லூரி
அறிவில் செயலில் உயர்ந்த ஆசார்
செறிவாய்த் தமிழும் ஆங்கிலம் சங்கீதம்
புவியியல் வரலாறு தொழில்சார் பாடம்
கவின்கலை கீதம் படிப்பித்த கல்லூரி
இலங்கைத் தமிழர் பல்லிடம் சார்ந்தோர்
நலமாய்க் கற்க உதவிய கல்லூரி
அங்கு படித்தோர் மருத்துவர் பொறியர்
எங்கும் இலங்கும் உபவேந் தராகவும்
கணக்காளர் கல்விமான் பேரா சிரியர்கள்
வணக்கத் துக்குரிய யோகிகள் ஆகவும்
உலகம் எங்கும் பரந்து வாழ்கின்ற
தலமாய் அவர்கள் அன்னையாம் கல்லூரி
மறப்பரோ! மறுப்பரோ! அன்னையாய் உயர்ந்ததை
நறவென நினைவில் நாளுமே போற்றுவர்
வாழ்க! எம்அன்னை ஆகிய கல்லூரி
நீள்க! அதனுடை மாண்பு என்றே
இறையில் சரணாய் வேண்டி
நிறைவாய்! நிறையாம் ஈசனை வேண்டுவமே.

அன்ரன் அலெக்ஸ், "பழைய மாணவன்"
(கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கனடா)

# நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கு ஏற்றுதல்
2. தமிழ்த்தாய் வாழ்த்து
3. கனடிய தேசிய கீதம்
4. கல்லூரிக் கீதம்
5. வரவேற்பு
6. இதழ் வெளியீடு - "தங்கக் கோவை 2003"
7. தலைமை உரை
8. நாடகம் - கணபதி ரவீந்திரன் ... "என்னடா கனடா இது"
9. நடனம் - திருமதி ஜெயந்தி சண்முகலிங்கத்தின் ... "நெறியாழ்கையில்"
10. நவீன இசை நடனம்
11. பொன்னையா இலங்கேஸ்வரன் இயக்கி வழங்கும் சரித்திர நாடகம் "தோழமையின் தூய்மை"
12. பிரதம விருந்தினர் உரை
13. இடை வேளை
14. தாள வாத்திய இசை
15. சிறப்புச் சொற்பொழிவு
16. மெல்லிசை
17. நன்றி உரை
18. நாடகம் - கலகலப்பு - தீசன்

சதா & லியோ தொகுத்து வழங்கும் "புதிய பூமி 2003"

# Programme

1. Lighting the Auspicious Lamp
2. Thamil Thaai Valthu (Song in Praise of Mother Tamil)
3. Canadian National Anthem
4. College Song
5. Welcome Address
6. Release of Publication
7. President's Address
8. Drama "ENNADA CANADA ITHU"- by Kanapathy Ravendran
9. Classical Dance- Choreographed- by Mrs. Jayanthi Shanmugalingam
10. A Novel Musical Presentation
11. A Historical Play- by Ponniah Lankeswaran
12. Chief Guest Address
13. Interval
14. Instrumental Music
15. Special Address by President
16. Pop Music
17. Vote of Thanks
18. Drama- by "Kalakalappu Theesan"

தீபாவளி & X-mas Sale

Cyber Netw@rk Canada

# Blowout Sale

WWW.CDNNETWORK.COM

**PENTIUM 4 2.4** — Brand New — Brand New 1 y warranty — DVD CD WRITER — Call for more info — $650

**PENTIUM 4 1.8** — Brand New — Call us to get more info — DVD — $550

**Intel Celeron** — Brand New — DVD — Call us to get more info — $425

**PENTIUM III 600** — $210

**PENTIUM III 450/500** — $185

**NEW TECHNOLOGIES — AWESOME BACK TO SCHOOL DEAL!! LAPTOP SPECIAL**

COMPAQ

Pentium III 500MHz
128 MB SDRAM
10GB Hard Drive
DVD-ROM
56K V.90 PCI modem
Network Card 10/100
CD-ROM 24X CD-ROM

$715

Also Available
Pentium III Pentium 4

**Pentium II Laptop** — $199

**Pentium Laptop** — $99

**NEW TECHNOLOGIES — AWESOME BACK TO SCHOOL DEAL!! LAPTOP SPECIAL**

COMPAQ

Pentium III 600MHz
128 MB SDRAM
15GB Hard Drive
DVD-ROM
56K V.90 PCI modem
Network Card 10/100
CD-ROM 24X CD-ROM

$815

Also Available
Pentium I,II Pentium 4

KEYBOARD $7
MOUSE $12
Brand New JOYSTICK $7
USB CABLE $4
USB CARD $15
SCANNER $58
10 FLOPPY DISK

256 DDR RAM $55
Brand New 128 MB SDRAM $34
50 PACK CD $16
Brand New HEAD SET $7
CD WRITER (SONY CD-R/RW) $55
Brand New 16X DVD $52
SOUND CARD $16

GAMES $9
Brand New CD ROM $28
WIRELESS MOUSE $28
WIRELESS KEYBOARD $28
4 PORT ROUTER $59
SURGE $17
HARD DRIVE 40G $89

USB SMART DRIVE 32/64/128MB $34
OPTICAL MOUSE $14
14" LCD MONITOR $275
Brand New 17" MONITOR Brand New $155
Color Printer Epson C42 $64
17" Monitor $85
HP 4000 Laser Laser Printer $850

**(416) 269-7662 (416) 269-8573**

**SCARBOROUGH**
16 Bimbrok, Unit 14
Scarborough, Ontario
M1K 4T7
MIDLAND / EGLINTON

Eglinton — Brimley — Bimbrok — Midland — Kennedy

Bring this Flyer and Get more Discounts

**ETOBICOKE**
1701 Martin Grove Road
Unit 11C
Rexdale, Ontario
M9V 4N4
MARTINGROVE / FINCH




ஒருவரது ஆளுமை உருவாக்கத்தில் கல்வி தான் மிக முக்கிய பங்கு அளிக்கிறது. வளமான வாழ்க்கைக்கு அவசியமான அறிவு, திறமை, மனப்பாங்கு என்பவற்றை வழங்குவதில் பாடசாலைகளே மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

அந்த வகையில் எமக்குக் கல்வி புகட்டி அறிவை வளர்த்த பாடசாலை முக்கிய இடம் பெறுகின்றது. அதன் ஆசிரியர்களும் அதிபர்களும் இதில் முதன்மை பெறுகின்றனர். அவற்றில் எமது பாடசாலையாம் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் ஒன்று என்றால் மிகையாகாது. “Education is an adjustment to life.” இந்த அடிப்படையில் எமக்கு வாழ்வும் வளமும் அளித்த எமது பாடசாலையை நினைவு கூர்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்நாளைய சில பசுமையான நினைவுகள் இன்றும் எமது மனதை விட்டு அகலாது. அந்த வயதில் நாங்கள் சிரித்து கதைத்து சிட்டுக் குருவிகளைப் போல சைக்கிளிலும் நடந்தும் பாடசாலைக்கு செல்வோம். அங்கு அணி அணியாகச் சென்று பச்சைப் பசேர் என்ற மா மரங்களுக்கு கீழே நின்று பிரார்த்தனை செய்வோம். பின்னர் வகுப்பறைக்குச் சென்று பாடங்கள் நடக்கும். நவராத்திரி காலங்கள் என்றால் ஒரே மகிழ்ச்சி. ஏனெனில், பாடங்கள் ஒழுங்காக நடக்காது. பாட்டுகள், நடனம், சகல கலா வல்லி மாலை என பயிற்சிகள் மும்முரமாக நடக்கும். அதே போல் விளையாட்டுப் போட்டி என பின்னேரம் ஆனதும் வேளையோடு பாடசாலை முடிந்து விடும். அணி வகுப்பு என ஒவ்வொரு இல்லமும் மைதானத்தைச் சுற்றி நடக்கும். இவையெல்லாம் எம்மை விட்டு நீங்காத நினைவுகள். எமது பாடசாலைக்கு என நான்கு இல்லங்கள் உள. அவை பெரியோர்களின சூட்டப்பட்ட பெயர்களாகும். கனகரத்தினம் - நீலம், சோம சுந்தரம் - பச்சை, அருளம்பலம் - மஞ்சள், பெரேரா - சிவப்பு என நான்கு நிறங்களை கொண்டது. நாம் எல்லோரும் அந்தந்த நிறங்களால் சோடித்து, சத்தம் போட்டு.. அவற்றை எல்லாம் நினைக்கும் போது எமது உள்ளம் பூரிப்படைகின்றது.

நம் அன்னை பூமியிலிருந்து பல தொலைவில் இன்று நாம் வாழுகின்றோம். ஆனால் எமது இதய வானில் இளமை வாழ்வின் பசுமையான பாடசாலை நினைவுகள் நிழலாடும் போதெல்லாம் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மனத்திரையில் வந்து போகும். விஞ்ஞானத்துறை என்றவுடன், தேவகி தில்லையம்பலம் இந்த ஆசிரியர் நமக்கு கிடைத்தது கல்லூரியின் பெரும் பாக்கியம். அவர் ஒரு இரசாயன புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அது

இன்றும் ஒரு பாடத்திட்ட புத்தகமாக மிளிர்கின்றது. இத் துறையில் சிவவீரசிங்கம், நல்லையா, பாலசுப்பிரமணியம், நமசிவாயம், பொன்னையா, தம்பையா என பல ஆசிரியரும் ஆசிரியைகளும் நினைவுக்கு வருகின்றார்கள். வர்த்தக துறை என்றால் கனகசபை, உபயசேகரம், கமீட், பாலச்சந்திரன் என பல ஆசிரியர்களும் கலைப்பிரிவு என்றால் விஜயகாந்தன், ஜுவரட்ணம், கிருஸ்ணபிள்ளை, தம்பிப்பிள்ளை, பாலசிங்கம் என பல ஆசிரியரும் எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய நிமிர்ந்த நடை இராஜதுரை அவர்களும், பதுமையான சுபாவ நடை கொண்ட அரியரட்ணமும் உயர்ந்த செல்வத்துரை அதிபரும்-இப்படி எத்தனையோ பேர் எமது பாடசாலையைக்கட்டி காத்து எம்மை நல்ல கல்விமான்களாக்க அரும் பாடுபட்டார்கள்.

எமது பாடசாலையில் படித்த மாணவர்களில் எத்தனையோ பேர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கணக்காளர்களாக, ஆசிரியர்களாக, பல்கலைக்கழக பட்டதாரிகளாக பட்டம் பெற்று வெளியேறியிருக்கிறார்கள். இவர்களை உருவாக்கிய பெருமை எமது ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்குமே உரியதாகும். படித்தோம், முடித்தோம், மறந்துவிட்டோம் என்று இல்லாமல் கல்வியறிவுடன் பண்பாடு கலாச்சாரம் என்பவற்றையும் புகட்டிய யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு எம்மால் இயன்ற உதவிகளை சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் உருவாக்கப்பட்டது தான் எமது பழைய மாணவர் சங்கம். இதனை மனதில் கொண்டு உழைப்போமாக.

"எண்ணும் எழுத்தும் கண்ணென தகும்"

எண்ணையும் எழுத்தையும் எமக்குப் போதித்து தந்த அறிவுக் கண்ணாம் யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தழைத்து ஓங்கவும், இந்த சந்தர்ப்பத்தை தந்த பழைய மாணவர் சங்கத்து தலைவர் திரு. சிவா அவர்களுக்கும் எனது நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன். அத்துடன் எமது சங்கம் நடாத்தும் "புதிய பூமி" நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாகவும் திறமையாகவும் நடந்து இனிதே நிறைவெய்த எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உண்மையான மகிழ்ச்சி, கடமைகளை உளமாறச் செய்வதில் இருக்கிறது. வாழ்க எம் கல்லூரி! வளர்க எமது சங்கம்.

நன்றி

கலாயினி பிரேம்குமார்
உதவிப் பொருளாளர்






## திரும்பிப் பார்க்காத பார்வைகளும் பாதைகளும்

கலகலப்பு தீசன்
(ஸ்ரான்லி விடுதி கனகரத்தினம் ம.ம.வி. பழைய மாணவன்)



பார்த்த ஞாபகம் இல்லையோ?
பருவ நாடகம் தொல்லையோ.....?

ஞாபகம்.....
ஆம் ஞாபகம் இருக்கிறதா?

இப்படி பாடல் வரிகள்
பலவற்றை எழுதிக் கொண்டே
போகலாம்...



எமக்கு எத்தனை வயது வந்தாலும் எமது ஞாபகங்கள்.. இன்னும் இளமையாகத் தான் இருக்கிறது.

எத்தனையோ வெற்றி, தோல்வி, கஸ்டம், கவலை, எனப் பல அனுபவங்கள் எமது வாழ்வில் ஏற்படலாம். ஆனால், பள்ளி வாழ்க்கை, படித்த பாடசாலை நண்பர்கள், அடித்தோ பேசியோ நகைச்சுவை மூலமோ எங்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் (இதனை வாசிக்கும் போதே பலருக்கு



பக்கத்தில் பழைய நண்பர்கள் நினைவுகள் கண்முன் வரத்தான் செய்யும்) எல்லோரையும் மறக்க முடியுமா?

ஆசிரியர்கள் நண்பர்களின் பெயரைத் தவிர, பட்டம் சூட்டி மகிழ்வதில் பெரு மகிழ்ச்சிதான். சக மாணவிகள், விடுதி மாணவிகளுடன் சண்டை போட்டு மகிழ்ந்த நாட்களும் உண்டு. இதைத்தான் அன்புச்சண்டை என்பதா? அடேயப்பா!



அப்போ பேஜர், ரெலிபோன், தொலைநகல் Fax இன்ரநெற், ஈமெயில் இல்லை. ஏன், ஒரு பெண் சினேகிதிக்கு தீபாவளி வாழ்த்து, பொங்கல் வாழ்த்து, நத்தார், புதுவருட வாழ்த்துப் போட்டாலே வீடுகளில் பூகம்பம் தான்.



இன்றெல்லாம் இளசுகள் இன்ரநெற்றிலேயே இளமை ஊஞ்சலாடுவதை நிறுத்த முடியாமல் பெற்றோர் படும் பாடு, ஈமெயிலால் இரவு துயிலின்றி இருக்கும் மாணவர்கள் வகுப்பில் தூங்குவதையும் காணலாம்.

## பள்ளியில் தூங்கியவன் கல்வியிழந்தான்



அன்று விடுதியை விட்டு அல்லது பாடசாலையை விட்டு வெளியேறும் போது கூட நண்பர்கள் பலரின் முகவரிகளை பெற நினைக்கவில்லை. அதனால் அவர்கள் முகங்களையும் மறந்தோம். எமது நண்பர்கள் உலகின் எந்தெந்த மூலையில் இருக்கிறார்களோ?



போர்ச் சூழலில் யார் யார் இறந்தார்களோ? யார் யார் எப்படியெல்லாம் வாழ்கிறார்களோ? நன்றாக வாழ்பவருக்காக ஆனந்தக் கண்ணீர். அவர்கள் உயிரோடு இல்லாவிடின் அவர்களுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர்.

கவலைக்கு ஒரு கண்ணும், ஆனந்தத்திற்காக மறு கண்ணும், இதற்காகத் தான் கடவுள் இரு கண்களைப் படைத்தானோ?

இன்றெல்லாம் இடப் பெயர்வு காரணமாக உள்ளூரிலேயே உறவுகளைக் தொலைத்து தேட முடியாதவர்களும், உலக நாடுகளில் விமானம் எங்கே இறங்கியதோ அங்கேயே வாழ்க்கையைத் தொடங்கி வளம் பெறுபவர்களும், 20 - 30 வருடங்கள் கழித்து ஓரிரு நண்பர்களை மீண்டும் சந்திக்கும் போது மனம் எவ்வளவு சந்தோசப்படுகிறது. எத்தனை நண்பர்களை மீண்டும் சந்திக்கப் போகிறோமோ?..

## பசுமை நிறைந்த நினைவுகளே. பாடித்திரிந்த பறவைகளே.. பழகிக் கழித்த தோழர்களே. பிரிந்து செல்கின்றோம்

கவிஞர் கண்ணதாசன் எப்படி இந்தப்பாடலை நெஞ்சைப் புண்ணாக்கி எழுதினாரோ?



அரியாலையில், ஸ்ரான்லிக் கல்லூரி இன்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். வாரா வாரம் சனி ஞாயிறு ஒலிபெருக்கி சத்தத்திற்கு குறைவில்லை. கலை பிறந்து வளர்ந்த இடமல்லவா? நாட்டுக்கூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, முத்தமிழ் விழா, கலைவிழா இவற்றிற்கு குறைவில்லை.

கண்டி அரசன், தேரோட்டி மகன், அரிச்சந்திரா, அடங்காப்பிடாரி, வெளிக்கிடடி விசுவமடுவுக்கு... காதில் ஒலிக்கிறது. கண் முன்னே நிற்கிறது.

மரியதாஸ், குமாரதியாகன், உபயசேகரம், சுதேசநாதன், நாகரத்தினம், இராசநாயகம் நாங்கள் படித்த காலத்தில் சாதனைகள் புரிந்து கண் முன் நிற்பவர்கள். விடுதியில் இருந்து மதிலில்லாத காலத்தில் மூன்று வேலிதான். அரிச்சந்திரா நாடகம் பார்த்து திரும்பி வரும் பொழுது அதிபரிடம் பிடிபட்டு அரிச்சந்திரா நாடகம் பார்த்தும் பொய் சொல்லிய காலம் மறக்க முடியுமா?



இது வாசிக்கும் வரை எத்தனை பேர் இதனை.. நினைத்திருக்க மாட்டார்கள். பிறவுன் வீதி ஊடாக மாம்பழம் சந்தி கோண்டாவில் என ஒரு இ.போ.ச. பஸ் பாடசாலை முன் ஓடியது இன்று அது ஓடுகிறதோ இல்லையோ. எமது.. நினைவுகள் அங்கே ஓடுகிறது.



றைட்........

## Denison Discount Pharmacy

**Kandavel** *(Velu)*
**Chiman Mistry** *(Jimmy)*

7380, Mc Cowan Rd.
Unit 9A Markham, Ont. L3S 3H8

Tel: 905 479 8999
Fax: 905 479 8885

உங்கள் மருந்துக்களை

DDP

## Fenton Discount Pharmacy

Faisal Matiwala
Chiman Mistry (Jimmy)
Kandavel (Velu)

**2 Fenton Rd. #5A**
(Steels & Fenton)
Markham

Tel: 905 948 9110
Fax: 905 948 1243

பிரியாஸ் சூப்பர் மார்க்கட்க்கு அருகாமையில்



## டாக்டர் ராஜ் கிருபா

குடும்ப வைத்தியர்

ஆண், பெண், சிறுவர், முதியவர்களுக்கான அனைத்து
பொது மருத்துவ சேவைகளுக்கும் நாடுங்கள்

Dr. Raj Kirubaharan, MD., MBBS, CCFP
Fenton Medical Centre

கரும்புள்ளிகள் (warts)
அகற்றப்படும் ... *Cosmetic*

**Tel : 905 948 9455**
**905 948 9534**
**Fax : 905 948 0570**




(பிரியாஸ் தமிழ்க்கடைக்கு அருகாமையில்)

**2, Fenton Rd, Unit #4, Markham, Ont. L3R 7B4**
**(Brimley / Steeles)**



# ரெலிபோன்

நேரம் காலை 8:30. வேலை தொடங்கி ஒரு மணி நேரமாகி விட்டது. இன்னமும் அருண் வேலைக்கு வரவில்லை. இன்றும் அவன் வேலைக்கு வரமாட்டானோ? என் மனதில் எழுந்த இக் கேள்விக்கு அர்த்தம் இருந்தது. காரணம் கடந்த இரண்டு நாட்களாக அவன் வேலைக்கு வரவில்லை. ஏன் அவன் வரவில்லை? வராவிட்டால், வரமுடியாவிட்டால் எனக்கவன் அறிவித்திருக்க வேண்டுமே. நான் அவனுடைய மேலதிகாரி என்பதால் மட்டுமல்ல அந்தத் தொழிற்சாலையில் அருண் நெருக்கமாகப் பழகும் சிலரில் நானும் ஒருவன். வெறும் நட்பாக மட்டும் இல்லாமல் எந்தவொரு நன்மை-தீமைகளில் கலந்து கொள்வதிலும் கருத்துக்களைப் பரி-மாறிக் கொள்வதிலும், காரசாரமாக விவாதித்துக் கொள்வதிலும் எந்த ஒளிவு மறைவுமின்றி எல்லாவற்றையும் என்னிடம் பகிர்ந்து கொள்வதிலும் என் மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பது எனக்கும் புரிந்தது. அருண் பெரிய அழகன் என்று சொல்ல முடியாவிட்டாலும் கம்பீரமும் சுறுசுறுப்பும் நிறைந்த இளைஞன். கனடா வந்து ஐந்து ஆண்டுகள் தான். ஆனாலும் படிப்படியாக முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் ஒரு சராசரி இளைஞன். சில சமயங்களில் அவன் நடவடிக்கைகள் எனக்கு வியப்பாகவும் சிரிப்பாகவும் இருக்கும். காலையில் வேலைக்கு வந்ததும் மனைவிக்கு தொலைபேசியில் தான் சுகமாக வேலைக்கு வந்து சேர்ந்து விட்டதாகச் சொல்லுவான். ஒவ்வொரு “பிறேக்கிற்கும்” போன் எடுத்து நலம் விசாரிப்பான். வேலை முடிந்து புறப்படும் போது போன் எடுத்து தான் புறப்படப் போவதாகவும், இன்னும் 25 நிமிடத்தில் வீட்டில் நிற்பேன் என்று சொல்லி விட்டுத் தான் வீட்டிற்கு போவான். எனக்கு இது ஆச்சரியமாக இருக்கும். ஒரு நாள் என் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவனிடம் “அருண் காலையில் வந்ததுமே வீட்டிற்குப் போன் எடுத்து சுகமாக வந்து விட்டதாகச் சொல்லவாய் பின்னர் அடிக்கடி தொலைபேசியில் நலம் விசாரிப்பாய். ஏன் ஒரு நாளைக்கு ஒரு தடைவ விசாரித்தால் போதாதா”? என்று அசடு வழியக் கேட்டேன். அதற்கு அருண் மிகுந்த உற்சாகத்தோடு பதிலளித்தான். “இல்லை சுரேஷ்.... என்ர மனுசி என்னில் உயிரையே வைச்சிருக்கிறா. அவ எனக்கு சொல்லிக் கட்டுப்பாடு எப்ப நான் வீட்டை விட்டு இறங்கினாலும் பத்து நிமிசத்திற்கு ஒரு தடைவ தனக்கு போன் எடுக்க வேணுமாம்... இல்லை எண்டா எனக்கு என்ன நடந்துதோ ஏதோ எண்டு தான் பயந்து கொண்டிருக்க வேணுமாம்.... அதுதான் மச்சான் அடிக்கடி நான் போன் எடுத்து நான் எங்க நிக்கிறன்.. எப்பிடி நிக்கிறன் எண்டு சொல்லிக் கொண்டிருக்கிறனான்” பெருமையோடு சொன்னான் அருண். நான் ஒரு கணம் அருணின் மனைவி வக்சலாவை நினைத்துப் பார்த்தேன். அருணுக்கு நேர் எதிரானவள். நல்ல வெள்ளை நிறம். மிகவும் அழகானவள். எப்பொழுதும் அவள் பேச்சில் கர்வம் இருக்கும். அவள் அழகில் அவளுக்குப் பெருமை. அது அவள் பேச்சில் அடிக்கடி தென்படும். ஆனால் அருண், அவள் தனக்கு கிடைத்த பெரும் அதிஸ்டம் என்று அவளைத் தூக்கி தலையில் வைத்துக் கொண்டாடுவான். ஒன்றிற்கு இரண்டு வேலை செய்து அவளை ஒரு மகாராணி போலவே வாழ வைத்துக் கொண்டிருந்தான். அவளை வேலைக்கு போகவிடாமல் வீட்டிலிருத்தி அவளுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் செய்து கொடுத்திருந்தான் அருண். வேலை செய்யும் இடத்திலும்

அருணுக்கு நல்ல பேர். எக்காரணத்திற்காகவும் அவன் லீவு எடுத்ததே இல்லை. அவனின் பணிவு - சுறுசுறுப்பு அனைவருக்கும் அவன் மீது விருப்பை ஏற்படுத்தியிருந்தது. அப்படிப்பட்ட அருண், கடந்த மூன்று நாட்களாக வேலைக்கு வரவில்லை. அதுபற்றி எந்த அறிவிப்பையும் அருண் தெரிவிக்கவுமில்லை. இன்று வேலை முடிந்து வீட்டிற்கு போகும் போது அருண் வீட்டிற்கு போக வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

நான் அருண் வீட்டிற்குப் போன போது நேரம் மாலை 6:30. மெதுவாகக் கதவில் தட்டினேன். சில நிமிட மௌனத்தின் பின் கதவு திறந்து கொண்டது. கதவுக்குப் பின் கலைந்த முடி - அழுதழுது வீங்கிப்போன கண்கள் நித்திரை இல்லாத சோர்வு அவன் முகத்தில் அப்படியே தெரிந்தது. இந்தக் கோலத்தில் அவனை நான் கண்டதும் அதிர்ச்சியாக இருந்தது. வீடு ஒரே அமைதியாக இருந்தது. ஏதோ விபரீதம் நடந்து விட்டதாக என் உள் மனம் எனக்கு உணர்த்திற்று. என்னைக் கண்ட மறு கணமே ஒரு குழந்தையைப் போல் ஓடி வந்து என் மார்பில் முகம் புதைத்து கேவிக் கேவி அழத் தொடங்கிவிட்டான் அருண். “டே. என்ன... என்ன இது.. குழந்தைப் பிள்ளை மாதிரி.. என்ன நடந்தது ஏன் இப்ப அழுற.. சொல்லு சொல்லு மச்சான் என்ன நடந்தது”. அவன் பதிலும் சொல்லவில்லை. “என்ன மச்சான் வீட்டில ஒருத்தரையும் காணேல்லை.. ஊரில... அம்மாவுக்கு ஏதும் சுகமில்லையோ?” நான் முடிக்கவில்லை அவன் “ஓ” வென்று பெருங்குரல் எடுத்து அழுதான். “எங்க மச்சான்.. வக்சலாவை காணேல்லை...?” தன் வலது கையை உயர்த்தி கையை விரித்துக் காட்டினான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனை ஆதரவாகத் தடவிக் கொடுத்தவாறு கேட்டேன் “என்ன எண்டாலும் விளக்கமாகச் சொல்ல வேணும் மச்சான்... பிளீஸ்... என்ன நடந்தது சொல்லு....” நா தழு தழுக்க அருண் சொன்னான் “அவள்... என்னை ஏமாத்திட்டுப்.... போட்டாள்.... மச்சான்...” ஆயிரம் சம்மட்டிகள் என் தலையில் இறக்கியது போலிருந்தது. “என்ன... என்ன சொல்ற... வக்சலா.... வக்சலா... இப்பவெங்க.... எங்க இருக்கிறா... எப்படி இருக்கிறா?” வார்த்தைகள் வர மறுத்தன. அவளுக்கு என்ன நடந்தது... ஏதும் விபத்தா? மனதிற்குள் எண்ணிக் கொண்டாலும் வெளியே கேட்கவில்லை. அருண் சொன்னான் “அவள் எங்க இருக்கிறாள் எண்டு எனக்குத் தெரியாது ஆனா இன்னொருத்தருக்கு மனைவியா இருக்கிறாள் என்பது தெரியும்” அவனை தொடர்ந்து பேச விடாமல் கேட்டேன் “என்ன... சொல்றா.. அருண்? உன்ர வக்சலா வேற ஒருத்தனைக் கலியாணம் கட்டிட்டாவோ? என்னால நம்ப முடியேல்ல..” “என்னாலும் தான் நம்ப முடியேல்ல அவள் என்னை அடி முட்டாளாக்கிப் போட்டுப் போட்டாள் மச்சான். நீ... அடிக்கடி என்னைப் பகிடி பண்ணுவ.. ஏன்ரா அடிக்கடி போன் பண்ணிப் பாக்கிறனீ... மனுசீ ஓடிடுவாளோ எண்ட பயமோ...? எண்டு கேப்பியே.. அதெல்லாம் அவளின்ர பிளான் மச்சான். நான் வேலைக்கு வந்திட்டன் என்டதை உறுதிப்படுத்தவும் எங்க நிக்கிறன் எண்டு தெரிஞ்சு கொள்ளவும் அவள் ஆடின நாடகமது. நான் வேலைக்கு வந்து போன் பண்ணின உடனே அவள் அவனை அடிச்சுக் கூப்பிட்டுவாள். நான் இறங்கேக்கை வரப்போறன் எண்டு அடிச்சோன அவனை அனுப்பிப் போட்டு நல்ல பிள்ளை மாதிரி இருந்திடுவாள். அடிக்கடி நான் போன் பண்றதால நான் எங்க நிக்கிறன் என்பதை உறுதி செய்து கொள்வாள். என்னைக் கான்ட் போன் வாங்க வேண்டாம் எண்டு தடுத்ததும் இதுக்குத் தான் மச்சான். “சரி உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?” நம்ப முடியாமல் கேட்டேன். அருண் சொன்னான் “அவளுக்கு நான் கான்ட் போன் வாங்கியது கொஞ்சமும் விருப்பமில்லை. எண்டாலும் முந்தநாள் நான் ஒரு போன் வாங்கிப் போட்டன். வேலைக்கு வாற அவசரத்தில அதை வீட்டில விட்டிட்டு வந்திட்டன். அரை வாசித் தூரம் வந்த பிறகு தான் எனக்கு போன்ர ஞாபகம் வந்தது. போனை வீட்டிலே விட்டேனோ அல்லது வேறு எங்கயாவது விட்டனோ எண்டு தெரியேல. எதுக்கும் வீட்டுக்கு அடிச்சுப் பாப்பம் எண்டிட்டு என்ர கான்ட் போனுக்கு அடிச்சன்.

வக்சலாதான் எடுத்தாள். நான் விசயத்தைச் சொன்னன். வீட்டை வந்து எடுத்துக் கொண்டு போகட்டோ எண்டு கேட்டன். அதுக்கு உடன அவள் "உங்களுக்கு என்ன விசரே. அவ்வளவு தூரம் போட்டியள் என்றியள்... போனுக்காக வரப்போறீங்களோ... அப்படி என்ன அவசரம் நாளைக்கு கொண்டு போங்கோ" என்டாள். அப்ப சரியப்பா... நான் வேலைக்குப் போட்டு அடிக்கிறன் எண்டு சொல்லவும் உடனே அவள் அவசரமாக வைச்சிட்டாள். ஆனா போன் சரியாக கட் பண்ணுப்படேல்லை. ஆரோ கதைக்கிறது எனக்குக் கேட்டது. உண்ணிப்பாகக் கவனிச்சன். "என்னவாம்.. உங்கட கனி" எண்டு ஒரு ஆண் கேக்க "அது போன விட்டிட்டுப் போட்டுதாம். எடுக்க வரட்டோ எண்டு கேட்டது நான் வேண்டாம் எண்டு சொல்லி ஒரு மாதிரிச் சமாளிச்சுப் போட்டன். அது சரி அது வேலைக்குப் போய் சேர்ந்துட்டன் எண்டு சிக்னல் தந்தாப் பிறகு தானே நான் உங்களை வரச் சொல்லி அடிக்கிறனான். இது என்ன இன்டைக்கு நான் அடிக்காமலே வந்து நிக்கிறீங்கள்.." செல்லமாக அவள் கேட்பதும் அதற்கு அவன் "எனக்கு அந்தளவுக்கு பொறுமையில்லை வக்சி உங்கட படிதாண்டாப் புருஷனிலை அவ்வளவு நம்பிக்கை எனக்கு. அவன் வேலைக்குப் போய் அதுக்குப்பிறகு நீங்கள் என்ன கூப்பிட. எதுக்கு வீனா ரைமை வேஸ் பண்ணுவான் எண்டுட்டுத்தான் நானே வந்திட்டன்" என்று அட்டகாசமாக அவன் சிரிப்பது எனக்கு கேட்டது. அதற்கு மேலும் என்னால் பொறுக்க முடியவில்லை. காரைத் திருப்பிக் கொண்டு போனேன். அங்க அவளும் - அவனும் இருந்த காட்சி.. என்னால் என்னைக் கட்டுப்படுத்தவே முடியேல்லை. அவளைக் கொல்ல வேணும் போல இருந்தது. கையை ஓங்கிக் கொண்டு போனன்... அவ்வளவு தான் அவள் சொன்ன சொல்லுகள். இதுக்கு மேல ஒரு அடி எடுத்து வைத்தியெண்டா நான் பொலீஸ்சுக்கு அடிப்பன்.. உன்னோட வாழ எனக்குப் பிடிக்கேல்ல நான் இவரோட போகப் போறன்... நான் பொலீஸ்சோட திரும்பி வந்து என்ர சாமான்களை எடுத்துக் கொண்டு போவன்." எண்டிட்டு அவனோட போட்டாள்" மிகுதியை முடிக்க முடியாமல் தேம்பி அழும் அவனுக்கு ஆறுதல் சொல்ல நான் வார்த்தைகளைத் தேடுகிறேன்.

*கணபதி ரவீந்திரன்*

## The lazy chickadee

There was once three chickadees living in a tree with their mother. Two of the chickadees were eager to learn how to fly and hunt for food with their mother. One day when all the chickadees were finally ready to fly, the mother bird came to teach them. Two of the chickadees started to learn. But one chickadee was lazy and did not want to learn how to fly. So the mother bird left the chickadee in the nest while the other two chickadees were practicing to fly. While the birdies were flying, a hunter was in the woods. He saw the beautiful chickadee in the nest and caught her. The hunter took the chickadee and put her in a cage at his home. The poor chickadee was so sad because she was too lazy to fly. She got caught instead, and was trapped in a cage for the rest of her life. The morale of the story is, "Never be lazy and always listen to your parents".

Thank you

Taarani Premkumar
Yr. 4



## SHAN MANOJKUMAR

**Pre Owned Sales & Leasing Consultant**

**DON VALLEY NORTH TOYOTA**
**3120 Steeles Avenue East**
**Markham, ON L3R 1G9**

**Toronto Line: 416-798 7188 Ext: 222**

**Tel: (905) 475-0722 Fax: (905) 475-8044**

**Cell: (416) 953-6485**



**Best Wishes From.....**

# விளம்பரம்

விளம்பரம் போட ஒரு விளம்பரம்
வினா விடை புத்தகத்திற்கும் விளம்பரம்
வியாபார நிலையத்துக்கும் விளம்பரம்
விளாம்பழம் விற்கவும் விளம்பரம்

வீடுகள் விற்கவும் விளம்பரம்
வீடுகள் திருத்தவும் விளம்பரம்
வீதிகள் கரையிலும் விளம்பரம்
வீரர்கள் முதுகிலும் விளம்பரம்

இடியப்பம் பிட்டிற்கும் விளம்பரம்
இரத்தினக் கல்லுக்கும் விளம்பரம்
இந்திய யாத்திரைக்கும் விளம்பரம்
இரவு விடுதிக்கும் விளம்பரம்

மாப்பிள்ளை தேடவும் விளம்பரம்
மணப்பெண் பார்க்கவும் விளம்பரம்
மாலை மணவறைக்கும் விளம்பரம்
மந்திரம் சொல்பவர்க்கும் விளம்பரம்

அரங்கு ஏற்றத்திற்கும் விளம்பரம்
அரங்கு ஆடலுக்கும் விளம்பரம்
ஆசான் மாருக்கும் விளம்பரம்
ஆண்மை விருத்திக்கும் விளம்பரம்

முடி வளரவும் விளம்பரம்
முடி வெட்டவும் விளம்பரம்
முக அழகுக்கும் விளம்பரம்
மூளை வளரவும் விளம்பரம்

கார் விற்கவும் விளம்பரம்
கார் திருத்தவும் விளம்பரம்
கார் ஓட்டவும் விளம்பரம்
கார் விபத்துக்கும் விளம்பரம்

கடை கணணிக்கும் விளம்பரம்
கல்வி கூடத்துக்கும் விளம்பரம்
கனடா நாட்டிற்கும் விளம்பரம்
கடவுள் மாருக்கே விளம்பரம்

பொன்னையா இலங்கேஸ்வரன்

# இயற்கையோடு இணைய வேண்டும்

மின்னலைப் பிடித்து வீதியில் நிறுத்தி
இருள் எனும் எதிரியை விரட்ட வேண்டும்

இடியெனும் அரக்கன் எழுப்பிடும் ஒலியை
இரு விழிப்பார்வையால் நிறுத்த வேண்டும்

வெள்ளம் எனும் வீரன் வீரநடை போட்டால்
எல்லையினைத் தொடுமுன் நிறுத்திட வேண்டும்

புயல் எனும் கொடியவன் புரட்டிடும் மரங்களை
புதியதாய் நாட்டி வளர்த்திட வேண்டும்

வெயில் எனும் வேந்தன் வெறுப்புடன் வந்தால்
விருப்புடன் அவனை ஏற்றிட வேண்டும்

தேய்ந்திடும் நிலவை தேடியே சென்று
திரும்ப அழைத்து வந்திட வேண்டும்

வானில் சிதறி இருக்கும் மின்மினிகளைச் சேர்த்து
சிற்பமாய் செதுக்கிக் காட்டிட வேண்டும்

வானவில்லை இழுத்து வந்து
வர்ண வீடுகள் கட்டிட வேண்டும்

மழையினை அழைத்து மலர்களுக்கு அளித்து
மனதுக்கு இனியவளிடம் கொடுத்திட வேண்டும்

காற்றினில் வரும் ஒலிகளைச் சேர்த்து
கானங்களாய் இசைத்திட வேண்டும்

பறந்திடும் பறவைகள் பாடிடும் பாடலை
பதுங்கி ஒழித்து ரசித்திட வேண்டும்

துள்ளிவரும் மானை துரத்தி வேட்டையாடும்
வில்லேந்திய வேங்கையரை விரட்டிட வேண்டும்

மாலை நேரங்களில் சோலையெங்கும்
மயிலினம் கூட்டமாய் ஆடிட வேண்டும்

மலையினைக் குடைந்து மாளிகை அமைத்து
ஏழை மக்களுக்குக் கொடுத்திட வேண்டும்

காடுகள் மத்தியில் கோயில்கள் அமைத்து
கடவுளை அமைதியாய் தியானித்திட வேண்டும்

இவையெல்லாம் எமக்கு இயற்கை தந்த
வளம் என்று இன்பமாய் வாழ்வை
வாழ்ந்திட வேண்டும்

சகிலா நிமலதாஸ்

# MEGA BANQUET HALL

# மெகா பாட்டி ஹால்




திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்த நாள்

உங்கள் இல்லங்களில் நிகழும்
அனைத்து வைபவங்களையும்
சிறந்த முறையில் நடாத்த
நகரில் அழகிய மண்டபம்

மற்றும் உங்கள் சகல வைபவங்களையும்
அறுசுவை உணவுடன் ஆடம்பரமாகக்
கொண்டாட எம்மிடம் தகுந்த
Package உண்டு

Call: Jegan

Tel : 416 457 8224 / 416 492 5589
3330 Pharmacy Ave., Scarborough, ON
(Pharmacy & McNicoll)

# பாடசாலைப் பகிடிகள்

விடுதி மாணவன் : டேய் குமார், பக்கத்து வீட்டு பலா மரத்திலை பழுத்து மணக்கிது. இரவைக்கு Warden-க்குத் தெரியாமல் பிடுங்க வேணும்.

குமார் : ஏன் Warden-க்குத் தெரிஞ்சால் அவர் முந்தி விடுவாரோ?

ஆசிரியர் : ஆடு கத்தும், மாடு கதறும், பூனை சீறும், காகம் கரையும்

மாணவன் : சார், காகம் கரைவது இரசாயன மாற்றமா? பௌதீக மாற்றமா?

சுந்தரி : எடியேய்! இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் சுரேஸ் இடம் கொடுக்கிறியா?

மாலதி : இந்தத் துணிவு எனக்கு இருந்தால் நானே அவனுக்குக் கடிதம் கொடுத்திருப்பேனே

வர்த்தக ஆசிரியர் : உண்டியலின் பெறுமதியை தீர்மானிப்பவை எவை?

மாணவன் : கோவிலும், பக்தர்கள் தொகையும்

அதிபர் : நாளை முதல் எல்லோரும் காலுக்கு செருப்புப் போட்டுக் கொண்டுதான் பாடசாலைக்கு வரவேண்டும்.

மாணவன் : சார், நீங்கள் பெட்டையளுக்கு ஆயுதம் வழங்கிறியள்.

ஆசிரியர் : பரீட்சை எழுதும் போது கவனிக்க வேண்டியவை எவை?

மாணவன் : பார்த்து எழுதும் போது பிடிபடாமல் இருப்பது. பார்த்து எழுதும்போது அந்த மாணவனின் சுட்டெண்ணை எனது தாளிலும் எழுதாமல் எனது எண்ணையே எழுத வேண்டும்.

ஆசிரியர் : பாடசாலைகளுக்குச் சீருடைகள் இருப்பது ஏன்?

மாணவர் : பிழையான பாடசாலைக்குள் நுழையாமல் இருப்பதற்காக

ஆசிரியர் : செல்வத்துள் சிறந்தது எது?

மாணவன் : 7ம் ஆண்டில் படிக்கிற செல்வம் தான் சிறந்தவன் சார்

யோகாம்பிகை இலங்கேஸ்வரன்
*உபசெயலாளர்*

# KUGAN STUDIO

## குகன் ஸ்டுடியோ

Family Portraits /
Children Portraits /
Custom Prints
Passport /
Citizenship
(BW / Col) Photos
Custom Frames /
Copy Work /
Lamination

Albums /
Films

**HIGH QUALITY DIGITAL PRINTING**

பழைய சிறிய படங்கள்
எதுவானாலும்
பெரிய அளவில்
(Enlargement)
செய்து கொடுக்கப்படும்.

திருமணம்,
பூப்புனித நீராட்டல்,
பிறந்தநாள்,
அரங்கேற்றம்
ஆகியவற்றைச்
சிறந்த முறையில்
படம் பிடித்துக்
கொள்ள நாடுங்கள் ...

# Tel : 416 431 1771

671 Markham Road, Scarborough, Ont. M1H 2A5
(Markham & Lawrence)

# சுயநலம்

காப்புறுதி முகவர் : அம்மா எவ்வளவு தொகைக்கு காப்புறுதி எடுக்கப்போறியள்?

காப்புறுதி பெண் : எனது பெயருக்கு 25 ஆயிரம் அவருடைய பெயருக்கு ஒரு இலட்சம்!

காப்புறுதி முகவர் : ஏனம்மா இந்தப் பாரபட்சம்?

காப்புறுதி பெண் : இந்த மனுசன் குடிச்சு குடிச்சு எனக்கு முதல் செத்துப் போகும். என்னுடைய சீவியத்துக்கு ஒரு இலட்சம் தேவை தானே.

காப்புறுதி முகவர் : சரி, நினையாப் பிரகாரம் நீங்கள் முந்திவிட்டால்?

காப்புறுதி பெண் : நான் முந்திவிட்டால் அதற்குப்பிறகு அவருக்கு ஏன் ஆடம்பர வாழ்க்கை!

# காகம்

பெண் காகம் : இந்த மனிதர்களைப் பார்த்து உங்களுக்கும் கெட்ட குணம் வந்து விட்டது.

ஆண் காகம் : எதை வைத்து அப்படி சொல்லுகிறாய்

பெண் காகம் : பொது இடங்களில் வைத்து என்னைக் கொஞ்சுகிறீர்களே!

# வீடு

வாங்குபவர் : ஐயா, ஊரிலை நாங்கள் விறகிலை சமைச்ச மாதிரி இங்கேயும் சமைக்கலாமோ?

முகவர் : ஊரிலை விறகு இருந்தாத்தான் சமைக்கலாம். இங்கே விறகு இல்லாமலே சமைக்கலாம்.

# நரை

ஊரிலே நரை உண்டு, வழுக்கை இல்லை
கனடாவிலே வழுக்கை உண்டு, நரை இல்லை

# செலவு

செலவு செய்து வளர்த்தெடுத்த உடலை
செலவு செய்து கரையப் பண்ணுகினம்.

யோகாம்பிகை இலங்கேஸ்வரன்



PRO MAR
Awards & Promotions

Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing

www.promarprint.com

416-291 2344

585 Middle field Rd, Unit-1,Scarborough



CLAIREPORT Place
Banquet & Convention Centre
A Division of Albion Westown Limited



திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழா
ஒன்று கூடல் மற்றும்
சகல வைபவங்களுக்கும்

என்றும் உங்கள்
சேவையில்

Contact
JEY OR SASI
416 675 7700
416 460 7700



65 ClairPort Crescent, Etobicoke, Ont. M9W 6V5
(Steeles & Finch on Albion Road)
www.claireportplace.com
info@claireportplace.com



Taste & Quality
BABU
BABU CATERING, TAKE-OUT & BAKERY

416 298 2228
4800 Sheppard Ave., E # 201
Scarborough, ON
McCowan & Sheppard

வாடிக்கையாளர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு
காலை 9:00 மணி முதல் நள்ளிரவு
வரை சேவை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறிவித்தருகிறோம்.

இன்னும் உங்கள் தேவைக்கேற்ப சகல விதமான வெதுப்பக (Bakery) உணவு தேவைகளுக்கும் நாடுங்கள்.

Bakery Products

தாயக நினைவிற்கு அழைத்துச் செல்லும் பாண் வகைகள்
மீன் பண் (Fish Bun)
சங்கிலி பண்
தனித் தானியத்தில் செய்த பாண்
(Whole Wheat Bread)
ஆட்டிறைச்சி பண் (Mutton Bun)
பலவகை றோல்ஸ்
கேக் வகைகள்

Fast Food
Fast Service
Open Kitchen
சுவைபட சமைத்து தருகிறார்கள்
சுவையின் மறு பெயர் பாபு



GOPAL FURNITURE
1600 Brimely Rd. unit 9, Scarborough, ON





Tel: 416-293-9814

# Best complements of

Naganathan Veerasingam

Shell Clean Plus Car Wash
10 Station St. Ajax - ON - L1S 1R9
905 683 7721

Westney Shell
915 Westney Road South - ON - L1S 3M4
925 686 8325

# A1 Choice Supplies

Ravi Jegathees
*Sales Manager*

## Wholesale Distributors





* Paper Products
* Garbage Bags
* Cleaning Chemicals
* Restaurant Supply
* Industrial Shipping Supplies
* Linens
* Uniforms

5210 Finch Ave. E.Unit #24, Scarborough, ON - M1S4Z8
Tel: 416 291 3002 / Fax: 416 291 3390

Best wishes

*from*

**Dr. S.Earampamoorthy, M.D.**
California, U.S.A.

## GARY A. FREEDMAN
CHARTERED ACCOUNTANT

### "A People-Oriented Firm"

- Accounting & Auditing Services For Individuals & Corporations
- Tax & Financial Planning
- Computer Services
- Corporate & Personal Tax Returns
- Bookkeeping & Payroll Services
- QuickBooks Training

**(Free Initial Consultation)**

70 Villarboit Crescent, Unit 1
Concord
*(Minutes from the 407 & Dufferin)*

**905-669-7950**

E-mail: gary@freedmanca.com

## Brimell Toyota

TOYOTA






தமிழில் உரையாடி சர்வதேச
தரம்மிக்க புதிய, பாவித்த
Toyota
வாகனங்களை மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள



**Mr. Pillai**

**416-292-2241**
Ext: 4116
**Cell: 416-569-9080**
**www.brimelltoyota.com**

**$ 100 Free Coupon**
Please produce this after all negotiation to Mr. Pillai
Brimell Toyota
$100 will be reduced from the price

5060 Sheppard Ave. East, Scarborough
(Markham / Sheppard)

## அபிராமி அச்சகம் யாழ் கேக் ஹவுஸ்

19 ஆண்டுகளாக தமிழர் மத்தியில் நன்மதிப்பையும், 95ம் ஆண்டு ஸ்காபரோ பேக்கரிக்கான தங்கப் பதக்கத்தையும், சுகாதார விதிப்படி அரச அங்கீகாரத்தையும் பெற்றவர்கள்.



சைவ கேக், சைவ றிச்கேக், திருமன அழைப்பிதழ்கள், கேக் பெட்டிகள், பைகள் ஒருமித்து ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.



**416 431 6604 / 431-6874**

**Fax**
**416-431-7272**

**555 Markham Road, Scarborough, ON**
**(Markham & Lawrence)**



Canagaratnam MMV (Stanley College)
Net-Ball Team, Canada 2003

**Canagaratnam MMV (Stanley College) Past Student and Teachers Association of Canada thank you all from the bottom of our hearts for supporting this successful event.**

A1 Choice Supplies
Abirami Printing
Adaptive Rehabilitation Services
Babu Catering & Take-out
BMO Nesbit Burn Investment Advisor Ron
Brimell Toyota (Mr. Pillai)
Cdn network (Computers)
Canbe Foods Inc.
Casa Pirandello Ristorante
Ceresney / Weisberg in Association
Claireport Place
Don Valley North Toyota (Shan Manojkumar)
Denison Discount Pharmacy
Elane Cinema
Fenton Discount Pharmacy
Gary A.Freedman (Chartered Accountant)
Gopal Furniture
Jenny Auto Sales Inc.
Dr. Kiruba (Fenton Medical Centre)
Dr. Krume Starkovski (Dental Surgeon)
Kugan Studio
Mega Banquet Hall
Shell Clean + Car Wash Naganathan Veerasingam
NetPlus Computers
NKS Draperies & Blinds
Promar (Awards & Promotions)
Pushpakanthan Real Estate
Rashi Silks
Scotia Bank (Steeles & Silverstar Branch)
Sunflowers Furniture
Theesan (Legal Service)
Yarl Blinds & Drapery
Yarl Cake House

**Support those who supported us to the best of your ability.**

Looking for a way to lower your borrowing costs?

You're living in it.



The equity you've already built up in your home could help lower your interest rates and borrowing costs – potentially saving you hundreds of dollars a year. Find out more about the *Scotia Total Equity*® Plan at your nearest branch.

Scotiabank™

Steeles & Silverstar Branch
4723 Steeles Avenue East
Scarborough, ON M1V 4S5
416-297-7835

Life. Money. Balance both.™

™Trademarks of The Bank of Nova Scotia. ®Registered Trademark of The Bank of Nova Scotia.

ELANE CINEMAS
2800 EGLINTON AVENUE EAST 416-266-3456



யாழ்/ கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்
(ஸ்ரான்லி கல்லூரி)

பழைய மாணவர் - ஆசிரிய சங்கம்
கனடா கிளை வழங்கும்

புதிய பூமி 2003

சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறோம்

416-266-3456 416-703-8020